Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
* பல் கட்டுவதற்கும்,
* பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
* இலவச கண் பரிசோதனை செய்து,
நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)
(சி-976)

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 07 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.ஆகிர் 21 (22.06.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ்: 262



# தலைவரது ஒவ்வொரு முடிவும் உறுதியானது, தீர்க்கமானது!

## விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதி கேணல் கருணா

(மட்டக்களப்பு)

'எமது போராட்டமானது, நீண்டகாலப் போராட்டமாகும். இது தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டம். 18 ஆயிரம் மாவீரர்கள் தியாகத்தாலும், 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களின் உயிரிழப்புக்கும் மத்தியில் ஏற்பட்ட இன்றைய சமாதானமானது - இன்று எமது போராளிகளின் உயிரிழப்புக்கள், கைதுகள், பலாத்காரச் சீண்டல்கள் மத்தியிலும் தொடர்ந்து எம்மால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

எமது தேசியத் தலைவர் அவர்கள் பொறுமையாயுள்ளார். தலைவர் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் உறுதியானதாகவும், தீர்க்கமானதாகவும் அமையும். எனவே, மக்கள் எவரும் யோசனைகொள்ளத் தேவையில்லை'.

- இவ்வாறு, விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்திய



நிகழ்வுக்கு வந்திருந்த பெண்களில் ஒரு பகுதியினர்.

மூத்த தளபதி கேணல் கருணா அம்மான், மட்டு - அம்பாறை மாவட்ட பெண்கள் சமூக மேம்பாட்டு அமைப்பினரிடையே பேசும்போது தெரிவித்தார்.



கருணா

மட்டக்களப்பு, கரடியனாறு தேனகம் விடுதியின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் பெண்கள் சமூக மேம்பாட்டு அமைப்பினருக்கும், மூத்த தளபதி கேணல் கருணா அம்மானுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலில், மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ், மட்டு (10 ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாக யோசனையுடன் அரசதரப்புக் குழு வன்னி செல்லும்!

## சந்திரிகா - ரணில் இருமணிநேரம் சந்திப்பு!

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் குறித்தும், வட - கிழக்கில் அமைக்கப்படவிருக்கும் இடைக்காலக் கட்டமைப்பு குறித்தும், பிரதமரும் ஜனாதிபதியும் சந்தித்து உரையாடியுள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இச்சந்திப்பு, சுமார் இரண்டுமணித்தியாலங்கள்வரை நீடித்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பருமட்டான வரைபு தயாரித்தல் மும்முரம்

(கொழும்பு)

**வட - கிழக்கில் அமைக்கப்படவிருக்கும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து, விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடுவதற்கு, அரசதரப்புக் குழுவொன்று மிகவிரைவில் வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளதாக - அரசாங்கத்தின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேணாட் குணதிலக தெரிவித்தார்.**

அடுத்தவாரம் பிற்பகுதியில் கிளிநொச்சிக்குச் செல்லவிருக்கும் இவ்விசேட குழுவுக்கு, அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேணாட் குணதிலகவே தலைமை தாங்கவுள்ளதாகவும் தெரியவருகிறது.

அரசியல்யாப்பு மற்றும் சட்ட வல்லுநர்களுடன் - இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாகவும், அதன் அதிகார வரம்புகள் தொடர்பாகவும்- தற்போது இந்தக் குழுவினர் விரிவாக ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகிறது.

நேற்று லண்டன் சென்ற பிரதமர் ரணில், எதிர்வரும் 24 ஆம் திகதி நாடு திரும்புவார். அதற்கிடையில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான பருமட்டான வரைபு ஒன்று தயாரிக்கப்பட்டுவிடும் என்றும்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி துயிலுமில்லத்தில் பீல்ட்பைக் படையினர் அடாவடி!

### கண்காணிப்புக்குழுவிடம் புலிகள் முறைப்பாடு

(வடமராட்சி)

வடமராட்சி மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானம் செய்து கொண்டிருந்த பொதுமக்களையும், துயிலுமில்லப் பொறுப்பாளரையும் - மோட்டார் சைக்கிள் ரோந்தில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் பயமுறுத்தியதாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் புகாரிடப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக, விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறையினர் தமது கடும் ஆட்சேபணையை யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவிடம் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி யாழ்.மாவட்ட அரசியற்துறை விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பு வருமாறு -

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ரோக்கியோ நிதியைப் பயன்படுத்த இடைக்கால நிர்வாகம் தேவை!

### ஜப்பான் தூதர் ரணிலிடம் வலியுறுத்து

(கொழும்பு)

வட - கிழக்கில், புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு வசதியாக, இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று - வெளிநாட்டு இராஜதந்திரிகள் பலர் அரசுக்கு அழுத்தம் கொடுத்துவருகின்றனர்.

இவ்விடயம் குறித்து, வெளிநாட்டு இராஜதந்திரிகள் பலர் ஏற்கனவே பிரதமர் உட்பட அரசின் சிரேஷ்ட அமைச்சர்களுடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

கடந்தவாரம் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் - பிரதமரைச் சந்தித்து மேற்படி விடயம் குறித்து நீண்டநேரம் பேச்சு நடத்தியுள்ளார்.

இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தினால் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இலட்சக்கணக்கான மக்கள் பொங்கு தமிழுக்கு திரள்வர்!

### அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகி வருகின்றன

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினரால் முன்னெடுக்கப்படும், 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வில்- பல இலட்சக்கணக்கான மக்கள் ஒன்று திரள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று, யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வில் - யாழ். குடாநாட்டிலிருந்தும் தமிழர் தாயகத்தின் பல பகுதிகளிலிருந்தும் இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை - பொங்கு தமிழுக்கான அனைத்து ஏற்பாடுகளும் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு பூர்த்தியாகி வருவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

பொங்கு தமிழில் கூடும் மக்கள், 'நாங்கள் எங்கள் வீடுகளுக்குச் செல்வதற்காக, படையினரே - நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்' என்ற பிரகடனத்தை அரசுக்கும் சர்வதேசத்திற்கும் வெளிப்படுத்தவுள்ளனர்.

## விதார் ஹெல்கிஸன் குழுவினர் நோர்வேயிலிருந்து வருகின்றனர்!

(கொழும்பு)

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிஸன் தலைமையிலான விசேட தூதுக்குழு ஒன்று, மிகவிரைவில் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீண்டும் அமைதிப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் முயற்சியின் ஒரு கட்டமாகவே, மேற்படி நோர்வே அரசின் தூதுக்குழு கிளிநொச்சிக்குச் செல்லவுள்ளது.

கிளிநொச்சி செல்வதற்கு முன்னர் - இத்தூதுக்குழு அரசுடன் பேசுவதற்காக அடுத்தவாரம் கொழும்புக்கு (10 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை துறைமுக ஊழியர் வேலைநிறுத்தம்!

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்குதுறையில், பொருட்கள் இறக்கச் சென்ற தொழிலாளர்கள் மீது -இராணுவத்தினர் மேற்கொண்ட சோதனைக் கெடுபிடிக்கு எதிர்ப்புத் தெரிவித்து, இறங்குதுறை தொழிலாளர்கள் நேற்றுமுதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 2223891 071 349999 071 348888
074 - 512666 - 01 - 360290
(சி-975)

# பொங்குதமிழுக்கு அனைவரும் வருக; பொது அமைப்புக்கள் அறைகூவல்!

(யாழ்ப்பாணம்)

'பொங்கு தமிழ்' நிகழ்வுக்கு, தமிழ் மக்கள் அணியணியாய்த் திரண்டு வந்து, தம் ஆதரவை வழங்கி, தமிழ்மக்களின் ஏகோபித்த உணர்வை வெளிக்காட்ட வேண்டுமென, பொது அமைப்புக்கள் பலவும் அழைப்பு விடுத்துள்ளன.

**யாழ்ப்பாண மாவட்ட பொதுஅமைப்புக்களின் ஒன்றியம்**

சிங்கள அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தாகி மாதங்கள் 16 கடந்துவிட்டன.

இக்காலப்பகுதியில், சமாதானத்தின் பெயரால், எத்தனையோ விட்டுக்கொடுப்புக்களை, பொறுமையுடன் புலிகள் செய்துள்ளனர் என்றால், அது மக்களின் இயல்புவாழ்க்கைக்கு என்பது பகிரங்க உண்மையாகும்.

உடன்பாடு காணப்பட்டு 3 மாதங்களுக்குள், வடக்கு - கிழக்கில் இயல்பு வாழ்கை ஏற்பட்டுவிடும் என அரசு கூறியது.

ஆனால், உடன்பட்டதுபோல், மக்களின் இயல்புவாழ்க்கையில் அரசு அக்கறை காட்டவில்லை. மாறாக, மக்களின் அகதிவாழ்வும், அவலவாழ்வும்தான் தொடர்கின்றன.

இவ்வேளையில், இனப்பிரச்சினைக்கு நீதியானதும், கௌரவமானதுமான அரசியல் தீர்வை வலியுறுத்தி, யாழ். பல்கலைக்கழக சமூகம் ஏற்பாடுசெய்துள்ள 'பொங்கு தமிழ்' நிகழ்வு, மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுகின்ற பொது நிறுவனங்களின் ஒன்றியமான நாமும், எமது துறைசார்ந்த அமைப்பும் இணைவோம் என, யாழ்.மாவட்ட பொதுஅமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

**கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்**

தமது மரபுவழித் தாயகத்தில், சுயநிர்ணய உரிமையுடன் சுதந்திரமாக வாழ்வதற்கு, தமிழ்த் தேசிய இனம் உரித்துடையது என்பதை, சர்வதேசத்துக்கும், சிங்கள பேரினவாத சக்திகளுக்கும் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுவதற்காக, யாழ். பல்கலைக்கழகம் ஏற்பாடுசெய்துளள 'பொங்கு தமிழ்' நிகழ்வுக்கு - ஜனநாயக விழுமியங்களைத் தன்னகத்தே கொண்ட கூட்டுறவு நிறுவனங்களே, கூட்டுறவாளர்களே, தொழிற்சங்கங்களே ஒன்றுதிரள்வீர் என, கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

**தீவக மக்கள் நலன் காப்பகம்**

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 15 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும், எமது மக்களின் வாழ்வில் இயல்புநிலை ஏற்படவில்லை. அதன்காரணமாக, சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டு, யுத்தம் ஏற்படக்கூடிய ஆபத்தான சூழல் உருவாகிவருகிறது.

இந்நிலையில், "நாங்கள் எங்கள் வீடுகளுக்குச் செல்வதற்காக, படையினரே உங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள்'' என்ற மக்கள் விருப்பத்தை வெளிகாட்ட, யாழ். பல்கலைக்கழக சமூகம் ஏற்பாடு செய்துள்ள 'பொங்கு தமிழ்' நிகழ்வில், தீவக மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு, எமது உணர்வலைகளை உலகுக்கு எடுத்துரைப்போம் என, தீவக மக்கள் நலன் காப்பகம் அறைகூவல் விடுத்துள்ளது.


## புனிதவளன் கத்தோலிக்க அச்சக கட்டடத் தொகுதியில் காரியாலயம் விற்பனை நிலையம் வாடகைக்கு

13'X40' விஸ்தீரணமுள்ள இடம் சகல வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு. ஜூன் மாத முடிவிற்குள் தொடர்பு கொள்ளவும்.

The Manager,
St.Joseph's Catholic press complex,
360, Main street,
Jaffna.
T.P.2222378

(சி-1099)


## கண்ணீர் அஞ்சலி

அம்பிகா மருந்தக உரிமையாளரும் எமது கழக உறுப்பினருமான திரு.ந.சிவபாலன் அவர்களின் அன்புத் துணைவியார்

### திருமதி நாமகள் சிவபாலன்

அவர்களின் திடீர் மறைவினால் ஆழ்ந்த கவலை அடைகின்றோம்.

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செயலாளர்,
வடபிராந்திய
யாழ்.ஆங்கில மருந்து வணிகர் மன்றம்.

(390)


## விழியின் மீது விழிப்பாயிருங்கள்

➤ சிறிய எழுத்துக்கள் எழுதப் படிக்க சிரமப்படுகிறீர்களா?
➤ ஒருவிதமான தலைவலியினால் அவதிப்படுகிறீர்களா?

அப்படியாயின் நிச்சயம் கண் குறைபாடுதான் காரணம் (பாடசாலை மாணவருக்கு விசேட சலுகை உண்டு)

எம்மிடம் வாருங்கள்!

இலவச கண் பரிசோதனைகளும், ஆலோசனைகளும் வழங்கப்படும். அத்துடன்,

➤ முகப் பொலிவிற்கேற்ப சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும், மிதப்புப் பற்களுக்குக் கிளிப்போட்டுக்கொள்ளவும்

இன்றே விஜயம் செய்து பாருங்கள்

### எரிக் கணேஷ்

மூக்குக் கண்ணாடி அகமும் பல்கட்டும் இடமும்.
564, 566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கிளைகள்: 80, K.K.S.வீதி, சுன்னாகம். 91, K.K.S.வீதி, கொக்குவில்.
T.P.222-2486

(சி-1100)

## பாடசாலை அதிபர்களே மாணவ மணிகளே

உங்களுக்குத் தேவையான பாடசாலைப் புத்தகங்கள் எல்லாம் 10% - 20% வரையான கழிவுடன் அள்ளி வழங்கப்படும், தரமான பாடசாலை அலுவலக உள்ளீடுகள், எல்லாவகையான பாடசாலை நூல்களும் சரித்திரம், சாஸ்திரம், பிரபல எழுத்தாளர்களின் படைப்புக்கள், அறிவு வளர்க்கும் நூல்கள், சங்கீத உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், அறிவு வளர்க்கும் விளையாட்டு உபகரணங்கள், (கணிதம் கற்க), டீன் உபகரணம் (ஆங்கில உச்சரிப்பு), ஸ்கிறபல்ஸ், மொனோபொலி, அத்துடன் மக்கினற, பெனல், பச்சைபோட் வகைகள், எல்லா அளவுகளிலும் பைல் (File) அலுமாரி (கபினற்) இரும்பு அலுமாரி, பாடசாலை நூல் அலுமாரி, தொழிசார் உபகரணங்கள், விவசாய ஆயுதங்கள் எல்லாவற்றையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள். எங்களிடம் கொள்வனவு செய்யும் பொருட்கள் இலவசமாக வன்னிவரை பட்டுவாடா செய்யப்படும்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,
212, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021-2225542

(சி-1028)


## சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

வடமராட்சிப் பகுதியில் சொந்த வியாபாரம் செய்யும் சைவ சமயத்தைச் சேர்ந்த 32 வயதுடைய மணமகனுக்கு நல்ல குடும்பப் பண்பான, உயர் குலத்தைச் சேர்ந்த மணமகள் தேவை.

தொடர்பு: விளம்பர இல: 12, மே/பா நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (378)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள TVS CHAMP விற்பனைக்குண்டு. தொடர்பு: 101/1, ஓட்டுமடம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (சி-1105)


**நிறஞ்சனாஸ்** சங்கானை

விஜயகாந், பிரகாஷ்ராஜ், சௌந்தர்யா நடித்த

**சொக்கத் தங்கம்**

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு. 8.45 (பு.நே)

BEHIND ENEMY LINE

(சி-974)

**ராஜா** யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு சரத்குமார், மீனா, ரம்யா கிருஷ்ணன் நடித்த

கே.எஸ்.ரவிக்குமாரின் **பாறை**



10.30, 2.30, 6.30, 9.30

(சி-973)

## அறிவித்தல்

மில்க்வைற் நிலசோப் மேலுறைகளைக் கவனித்து வாங்கவும். போலி சோப் அதேபோன்ற மேலுறையுடன் விற்பனையாகின்றது. எமது வாகனத்தில் 10 மேலுறைகளைக் கொடுத்து ஒரு நீல சோப்பை அன்பளிப்பாக வாங்கவும்.

மில்க்வைற் தொழிலகம்
த.பெ.இல. 77,
யாழ்ப்பாணம்.

(சி-952)


## நினைவு கூருகிறோம்

### 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### மேஜர் இன்பன் மாஸ்டர் (கலையழகன்)

**தர்மலிங்கம் சுகந்தன்**

(வலிகாமம் மேற்கு முன்னாள் பொறுப்பாளர்)
நவாலி வடக்கு, மானிப்பாய்

**வீரச்சாவு: 20.06.1999**

வேங்கை வீரனாய்
வீறுநடை போட்டவனே
களம் பல கண்டவனே
எதிரிதனை கலங்க வைத்தவனே
வீரர்களைப் பயிற்றுவித்து
வெற்றிதனைக் கண்டவனே
வலிகாமம் மேற்கிற்கு
வளமான பொறுப்பாளனே
நாட்டிற்கு உழைப்பதற்காய்
வீட்டைத்துறந்தவனே
காட்டிக்கொடுத்த கயவன் பகையினால்
கூட்டைவிட்டு உன்னுயிர்
கூவிப்பறந்ததையா
வித்தாக உன்னுடல் விதைக்கப்பட்டாலும்
பித்தாகி துடிக்குதய்யா பெற்றமனம்
பதைக்குதய்யா

*கொக்குவில் பகுதியில் ஏற்பட்ட நேரடி மோதலில் இவருடன் வீரச்சாவடைந்த கப்டன் மணிவண்ணன் (சர்வானந்தன் ராஜ்குமார்) இருவருக்கும் எமது வீரவணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*தொடர்புகளுக்கு:* *(பிரான்ஸ்)* *0664827038* (சி-1103)

*தகவல்:* அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, அத்தான், தம்பி, உறவினர்கள், நண்பர்கள், போராளிகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 - 06 - 1972



உதிர்வு 18 - 06 - 2002

### லோர்மன் லடிஸ் அன்ரன் (சின்னத்தம்பி)

ஓராண்டு மறைந்ததோ
உன் உடல் பாடையேறி....
நீ இறுதியாக
உறங்கி எழுந்த கட்டிலும்
உலவிய வீதியும்
பேசிய வார்த்தைகளும்
நினைவழியா சுவடுகளாய்
இன்னும் எம் மனங்களில்....
நீண்ட நெடு உருவமாய்
உன்னை அண்ணார்ந்து பார்க்கச் செய்தவனே
இன்று
மண்ணோடு மண்ணாக
நீண்ட துயில் கொண்டாயோ....
கொடுப்பதில் கர்ணனாய்
பழகுவதில் அன்பனாய்
எல்லோருக்கும் இனியவனாய்
இறுதி வாழ்வை முடித்தவனே
ஆண்டவன் சந்நிதியில்
உன் ஆன்மா இளைப்பாற
அனுதினமும் பிரார்த்திக்கும்.

உன் அன்பு அம்மா, அன்பு மனைவி
செல்வமகள் மற்றும் உறவுகள்

(சி/1102)

# வட-கிழக்கில் இடைக்கால நிர்வாகம்; பொ.ஐ.மு. எதிர்ப்புத் தெரிவிக்காது!

## பேச்சாளர் சரத் அமுனுகம கூறுகிறார்



வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படுவதைப் பொது ஜன ஐக்கிய முன்னணி எதிர்க்காது என்று, அக்கட்சியின் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

கொழும்பில் - எதிர்க்கட்சித் தலைவரின் இல்லத்தில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றியபோதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவது குறித்து, 2000 ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகாவினால் வெளியிடப்பட்ட தீர்வுத் திட்டத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தற்போது - ஐக்கிய தேசியக் கட்சியும், இத்தகைய இடைக்கால நிர்வாகம் ஒன்றை உருவாக்குவது பற்றிக் கருத்துக்கள் வெளியிட்டுள்ளது.

இந்த இடைக்கால நிர்வாகம் பற்றிப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெளிவாக எதையும் கூறவில்லை.

இந்த இடைக்கால நிர்வாகத்தின் அதிகாரங்கள் மற்றும் காலஎல்லை என்பன குறித்துப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

இந்த செய்தியாளர் மாநாட்டில் உரை நிகழ்த்திய, பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர -

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமானால், விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேசித்தான் ஆக வேண்டும். விடுதலைப் புலிகளுக்கும், பொது ஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையில் பேச்சுக்கள் இடம்பெற்றதாக வெளியான செய்திகள் தவறானவை. அதில் எந்த உண்மையும் கிடையாது என்று குறிப்பிட்டார்.

### திருப்பதிக்கு கிளைநிலையம் கொழும்பில் அமைக்க ஆலோசனை!

திருப்பதி வெங்கடாசலபதி ஆலயத்தின் - கிளை நிலையம் ஒன்றைக் கொழும்பில் திறப்பதற்கான அனுமதியை, இலங்கை அரசாங்கம் கோரியிருப்பதாக - ஆந்திர மாநில இந்து சமய விவகார அமைச்சர் தந்து சிவராமராஜா தெரிவித்தார்.

கொழும்பில் - இந்தக் கிளை நிலையத்தை ஆரம்பிப்பது தொடர்பான கோரிக்கை குறித்து, ஆந்திர மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு - பரிசீலனை செய்து வருவதாக அவர் தெரிவித்தார்.

ஆந்திர முதல்வரின் முடிவு பின்னர் மத்திய அரசாங்கத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டு, அனுமதி கிடைத்த பின்னரே, கொழும்பில் கிளை நிலையத்தை அமைப்பது பற்றி முடிவு செய்யப்படும்.

இதேவேளை, திருப்பதி ஆலயத்தின் கிளைக் கோயிலான ராமாலயம் ஒன்றைக் கொழும்பில் அமைப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### மீண்டும் 'சேருவில I I' சேவையில்!

திருகோணமலைக்கும் - மூதூருக்கும் இடையிலான பயணிகள் போக்குவரத்தில், "சேருவில் I I' என்ற படகு மீண்டும் இன்றுமுதல் ஈடுபடவுள்ளது.

2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஏற்பட்ட விபத்தை அடுத்து, இந்தப் படகு - சேவையில் ஈடுபடுத்தப்படாமல் இருந்தது. திருத்த வேலைகளுக்குப் பின்னர், இப்படகு மூதூருக்கும் - திருமலைக்குமிடையில் இன்று முதல் சேவையில் ஈடுபடவுள்ளது. இப்படகில் 250 முதல் 300 வரையான பயணிகள் பயணத்தை மேற்கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

### மின்கம்பம் முறிந்து மின் ஊழியர் காயம்

மின்கம்பம் ஒன்றில் ஏணியின் உதவியுடன் ஏறிய மின்சாரசபை ஊழியர் ஒருவர், மின்கம்பம் முறிந்து வீழ்ந்ததில் படுகாயமடைந்து, யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். காரைநகர் பிரதான வீதிப்பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் - பொ.சிவலிங்கம் என்பவரே படுகாயமடைந்தவராவார். (52)

# ரயில், பஸ் கட்டணங்களை அதிகரிக்க அரசு பிரேரணை!

## அமைச்சரவையில் முன்வைப்பு

பஸ் மற்றும் ரயில் போக்குவரத்துக் கட்டணங்களை அதிகரிப்பதற்கான அனுமதியைக் கோரும் பிரேரணை - அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக, போக்குவரத்து பிரதி அமைச்சர் பியசோம உபாலி தெரிவித்தார்.

கடந்த பத்து வருடங்களாக ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்படவில்லை. பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் ரயில் சேவைகளை நடத்த வேண்டியுள்ளது.

தனியார் பஸ் கட்டணங்கள் பல முறை உயர்த்தப்பட்டபோதும், போக்குவரத்துச் சபை பஸ்களின் கட்டணம் அதிகரிக்கப்படவில்லை எனத் தெரிவித்த அவர்-

ரயில், பஸ் கட்டணங்களை அதிகரிப்பது குறித்து, அமைச்சரவையின் கூட்டத்தில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

# நாடாளுமன்ற ஊழியர் உடையில் பொலிஸார்; எதிர்க்கட்சிகள் மீது தாக்குதல் நடத்தத்திட்டம்!

## தினேஷ் குணவர்த்தன குற்றச்சாட்டு

நாடாளுமன்ற ஊழியர்கள் அணியும் உடையைப் பொலிஸாருக்கு அணிவித்து, எதிர்க்கட்சி நாடாமன்ற உறுப்பினர்களைத் தாக்குவதற்கு அரசாங்கம் திட்டமிடுவதாக, பொ.ஐ.முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவருமான தினேஷ் குணவர்த்தன சபாநாயகரிடம் முறையிட்டார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கூட்டத்தில் உரையாற்றியபோதே, தினேஷ் குணவர்த்தன இந்த முறைப்பாட்டைச் செய்தார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களைத் தாக்குவதற்கு, நாடாளுமன்றக் காவலாகளின் உடைகளில் பொலிஸாரை அனுப்பும் அரசாங்கத்தின் திட்டம் குறித்து, விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரோவிடம் கேட்டுக்கொண்டார்.

இதையடுத்து, உரையாற்றிய சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா - பொதுஜன ஐக்கிய முன்னணியினரும், ஐக்கிய தேசியக் கட்சியினரும் சபை நடவடிக்கைகளைக் குழப்பமின்றி நடத்த ஒத்துழைக்காவிட்டால், தான் பதவி விலகப் போவதாகத் தெரிவித்தார்.

# வைத்தியர்களின் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தம்!

ஒன்பது நாட்களாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் - தமது போராட்டத்தை நேற்று முதல் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளனர்.

வைத்திய அதிகாரிகளின் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்கும் - சுகாதார அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையை, அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுவதற்குக் கால அவகாசம் வழங்கும் பொருட்டே வேலை நிறுத்தப் போராட்டம் இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு கூடிய அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நடவடிக்கைக்குழுவின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் செயலாளர் வெளியிட்ட சுற்றறிக்கையை, அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்து, அங்கீகாரம் பெறுவதற்குக் கால அவகாசத்தை வழங்கும் பொருட்டு - 26 ஆம் திகதி காலை 8 மணிவரை வேலை நிறுத்தப்போராட்டத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதென இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இதேவேளை, அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில்- சம்பள முரண்பாடுகளைத் தர்க்கும் சுற்றறிக்கைக்கு அங்கீகாரம்பெற நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் - நாடு மோசமான சுகாதாரச் சீரழிவுகளை எதிர்நோக்க வேண்டிய நிலை உருவாகும் என்றும், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில், சம்பள முரண்பாடுகளைத் தீர்க்கும் சுற்றறிக்கைக்கான அங்கீகாரம் பெறப்படும் என்று சுகாதார அமைச்சின் செயலாளர், அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்துக்கு உறுதியளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு நிதி உதவிகளை பொ.ஐ.மு. பயன்படுத்தவில்லை!

## அமைச்சர் ராஜித சேனாரத்ன குற்றச்சாட்டு

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் கிடைத்த வெளிநாட்டு உதவிகள் - சரிவரப் பயன்படுத்தப்படாததால், அவற்றில் பெரும் பகு[illegible]கிய நிறுவனங்களா[illegible]தாக, காணி அ[illegible]


ஆட்சிக்காலத்தில் 45 சதவீதமான நிதியுதவிகள் அபிவிருத்தித் திட்டங்களில் செலவு செய்யப்பட்டுள்ளது.


இம்முறை ஜப்பானில் கிடைத்த நிதியுதவியில் ஒரு சதமேனும், உதவி வழங்கிய நிறுவனங்களால் திரும்பப் பெற முடியாதவாறு அபிவிருத்தித் திட்டங்களுக்குச் செலவிடப்படும் என்றும் காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

# [illegible]வெளிச்சம் இதழ் [illegible]துள்ளது

[illegible]ண்பாட்டுக்கழகத்தின் வெளியீடான [illegible] இதழ் வெளிவந்திருக்கிறது. இந்த [illegible]வரின் கருத்துரையுடன்- மாலிகா, [illegible]தபின், பத்தனையூர் வே.தினகரன், [illegible]முருகன், கோளாவில் கி.சுரேந்தி[illegible]ச்செல்வன், மாணிக்கன் இளங்கோ [illegible] செல்வன், முத்து இராதாகிருஷ்[illegible]ரவிந்தன் ஆகியோரது சிறுகதைக[illegible]

[illegible]ம், க.சட்டநாதன் ஆகியோரின் [illegible]பாட்டு படைப்பு ஒன்றும், நர்த்[illegible]னின் மொழிபெயர்ப்புக் கட்டுரை [illegible]கூடல் 2003 இன் பதிவுகளும், [illegible]ஞ்சிகைக்கான ஓவியங்களை [illegible]







திருநெல்வேலி சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் - புனரமைப்புச் செய்யப்பட்ட வழிபாட்டு மண்டபத் திறப்புவிழாவில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், அங்கு புதிதாக அமைக்கப்பட்ட கணினிக் கூடத்தினை யாழ். பல்கலைக்கழக வணிகமுகாமைத்துவப் பீடாதிபதி நடராஜசுந்தரம் ஆரம்பித்து வைப்பதை இரண்டாவது படத்திலும், சிறுவர் இல்லச் சிறார்களை மூன்றாவது படத்திலும் காணலாம்.

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# நியமனம் பெற்ற தொண்டராசிரியரில் 30 பேர் வேறு பணிகளில் இணைந்தனர்!

(ஆழியவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் தொண்டராசிரியர் நியமனம் கிடைக்கப் பெற்றோரில், 30 பேர் ஏற்கனவே வேறு பணிகளுக்குச் சென்றுவிட்டதாகக் கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகம் தெரிவித்துள்ளது.

அண்மையில் வழங்கப்பட்ட தொண்டராசிரியர் நியமனத்தில், கிளிநொச்சிக் கல்வி வலயத்தில்- 135 தொண்டராசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது. இவர்களில் 105 தொண்டராசிரியர்களே தற்போது கடமையில் உள்ளதாகக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தெரிவித்துள்ளார்.

மிகுதி 30 பேரும் ஏற்கனவே ஆசிரியர் நியமனங்கள் பெற்று, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும், வேறு அரச திணைக்களங்களிலும் கடமை புரிகின்றனர்.

இந்த தொண்டராசிரியர்களுக்கு நியமனங்கள்- காலம் கடந்து வழங்கப்பட்டதா லேயே, இந்த 30 இடங்களும் நிரப்பப்படாமல் உள்ளதாகவும் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (122)

# ஹாட்லி, மெதடிஸ்த மாணவர்கள் மாலையில் நடமாடுவதற்குத் தடை!

## படையினர் புதிய உத்தரவு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி - ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பிற்பகல் 3.30 மணிக்கு முன்பதாக, பாடசாலையிலிருந்து வெளியேறிவிட வேண்டுமென இராணுவத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், பாடசாலையில் மாலை நேரத்தில் விசேட வகுப்புக்களிலும் மற்றும் கல்விசார் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதற்கு - மாணவர்களாலும், ஆசிரியர்களாலும் முடியாமல் உள்ளது. படையினரின் இந்த உத்தரவினால், மாணவர்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

அத்துடன், ஹாட்லி மற்றும் மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவ - மாணவிகள் பாடசாலைக்குப் போகும்போது, இராணுவத்தினரால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

முன்பு மாணவிகளைப் பொலிஸாரே பரிசோதனைக்கு உட்படுத்தினார்கள். ஆனால், தற்போது இராணுவத்தினரே மாணவிகளைப் பரிசோதனை செய்து வருகின்றனர்.

இதனால், மாணவிகள் பெரும் அசௌகரியங்களை அனுபவிக்க நேரிடுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது. (09)


# மிலிந்தவின் உரைகள்; நூல் வெளியிடப்பட்டது!

(கொழும்பு)

அமைச்சர் மிலிந்த மொறகொடவின் உரைகள் அடங்கிய நூல் ஒன்று, கடந்த வியாழக்கிழமை கிறீஸ் நாட்டில் வெளியிடப்பட்டது.

ஐ.டி.யு. நிறுவனத்தினால், வெளியிடப்பட்டுள்ள இந்த நூல் - ஐ.டி.யு. நிறுவனத்தின் உபதலைவரும், நோர்வே வெளிவிவகார அமைச்சருமான ஜான் பீட்டர்ஸனின் தலைமையில் இடம்பெற்ற வைபவத்திலேயே வெளியிடப்பட்டது.

இந்த நூல் எதிர்வரும் 25 ஆம் திகதி அமெரிக்கா - வொஷிங்ரன் நகரில் வெளியிடப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலைய கல்விக்கழகப் பரிசளிப்பு விழாவில் - தென்மராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் சிறிநாத் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# சைவப்புலவர் பரீட்சையில் தேர்ச்சி பெற்றோர் விபரம் !

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் - இவ்வாண்டு நடத்திய சைவப் புலவர், தேர்வுகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. சைவப்புலவர் தேர்வில் தேர்ச்சி பெற்றோர் விபரம் வருமாறு-

இரண்டாம் பிரிவில் -

விஜிதா குமாரசாமி (கொக்குவில்), சிவாஜினி கந்தையா (உடுவில்), ஆறுமுகம் சிவகுமார் (பண்டத்தரிப்பு), துளசிமலர் வைத்தி (சாவகச்சேரி), கலைச்செல்வி கந்தசாமி (சுழிபுரம்), ஜெ.சிவக்கொழுந்து (சுழிபுரம்), உமா பாலசிங்கம் (உடுப்பிட்டி), உஷாஜினி பேரானந்தம் (அலவாய்), கதிரமலை கவிதா (கோண்டாவில்), ஆனந்தி ஜெயரட்ணம் (மானிப்பாய்), இரத்தினசபாபதிக் குருக்கள் திருமாறன் (பருத்தித்துறை), பிருந்தகுமாரி இராமச்சந்திரன் (திருநெல்வேலி).

மூன்றாம் பிரிவில் - பேபிவதனா தில்லையம்பலம் (வரணி), சிவசக்தி தளையசிங்கம் (கோப்பாய்), மகேஸ்வரி சுப்பிரமணியம் (மீசாலை) ஆகியோரே தேர்ச்சி பெற்றவராவார்.

### நெடுந்தீவுப் பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் - எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உதவி அரசாங்க அதிபர் ச. பேராணந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில், நெடுந்தீவில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திப் பணிகள் பற்றி ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# விரைவில் ஆயிரம் பேருக்கு மீனவர் அடையாள அட்டை

யாழ்.குடாநாட்டில், கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களம் - இது வரை 7000 மீனவர் அடையாள அட்டைகளைக் கடற்தொழிலாளர்களுக்கு வழங்கியுள்ளது.

இதேவேளை - மேலும் ஆயிரம் மீனவர் அடையாள அட்டைகள் மிக விரைவில் கொழும்பிலிருந்து எடுத்து வந்து வழங்கப்படவுள்ளன. அத்துடன், தாமதமாக அனுப்பப்பட்ட 300 விண்ணப்பங்களுக்கான, அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதாக கடற்தொழில் நீரியல் வள திளைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.






### போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வுக் கூட்டம்

சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு - போதைப்பொருள் விழிப்புணர்வுக் கூட்டம் - எதிர்வரும் 26 ஆம் திகதி, தாவடி காளி அம்பாள் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வடபிராந்திய நல்லொழுக்க சபைத் தலைவர் சி.ராசலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் - போதைப்பொருள் பாவிப்பதனால் ஏற்படும் கலாசார சீரழிவுகள், அதனால் ஏற்படும் தீமைகள் போன்றவை பற்றிக் கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன. (அ)

### சென்.ஜோன்ஸ் தின அணிவகுப்பு

உலக சென்.ஜோன்ஸ் தினத்தை முன்னிட்டு இன்று காலை 9 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் - பிரிவுகளின் அணிவகுப்பும், அதனைத் தொடர்ந்து நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் மாவட்ட ஆணையாளர் எஸ்.செல்வரஞ்சன் தலைமையில் நடைபெறவுளள இந்த நிகழ்வில - பிரதம விருந்தினராக அமைச்சா தி.மகேஸ்வரனும், முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினா சிவாஜிலிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனா.

### உழவு இயந்திரத்துக்கான நிதியுதவி

(கொக்குவில் மேற்கு)

வன்னி அபிவிருத்தி நிறுவனமும், தமிழா புனாவாழ்வுக் கழகமும் இணைந்து - கிளிநொச்சி அபிவிருத்தி அகதிகள் புனாவாழ்வு நிறுவனத்திற்குப் புதிய உழவு இயந்திரம் கொள்வனவு செய்வதற்குரிய நிதியுதவியை வழங்கியதுடன், அந்நிறுவனத்தை வலுப்படுத்தும் நோக்குடன் தூய, நல்லின தென்னம்நாற்று மேடைகளை அமைப்பதற்கும் நிதி வழங்கப்பட்டுள்ளது. (108)

# ஆறு கிராம அலுவர் பிரிவுகளில் சேவா லங்கா உதவி வழங்கும்!

(ஆழியவளை)

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள - மீளக் குடியமர்ந்த ஆறு கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள மக்களுக்கு, ஜேர்மன் மனிதாபிமான உதவித் திட்டத்தின்கீழ் - சேவா லங்கா நிறுவனம் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளது.

இந்தவகையில் - இத்தாவில், அரசர்கேணி, தர்மக்கேணி, அல்லிப்பளை, முல்லையடி, கச்சாய்வெளி ஆகிய இடங்களில் குடியேறிய வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மக்களுக்கு, தற்காலிகக் கொட்டில்களை அமைத்துக் கொடுக்கவும் - சமையற் பாத்திரங்களையும், விவசாய உபகரணங்களையும், வீட்டுத்தோட்ட உள்ளீடுகளையும், உரவகைகளையும் வழங்க சேவா லங்கா நிறுவனம் முன்வந்துள்ளது.

தற்போது கிராம அலுவலர்கள் மூலமாகப் பயனாளிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (122)

# தெற்காசியப் பிராந்தியத்துக்கான உலக வங்கியின் புதிய தலைவர்!

(கொழும்பு)

தெற்காசியப் பிராந்தியத்துக்கான புதிய தலைவரை உலக வங்கி நியமனம் செய்துள்ளது. உகண்டாவைச் சேர்ந்த பிரபூன் சி பட்டேல் என்பவரே உலகவங்கியின் தெற்காசியப் பிராந்தியத்துக்கான புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர், உலக வங்கியில் முப்பது வருடங்களாகச் சேவையாற்றி வருகின்றார். ஆபிரிக்கா, கிழக்காசியா, மத்திய கிழக்கு, வட அமெரிக்கா போன்ற இடங்களில் இவர் பணியாற்றியிருப்பதாகத் தெரியவருகிறது.

# அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு தொழிற்பயிற்சிப் பட்டறை!

வடக்கு - கிழக்கில் உள்ள மாவட்டங்களில் பணிபுரியும் அரச சார்பற்ற நிறுவனங்ளுக்கான தொழிற் பயிற்சிப்பட்டறை -

கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய இரண்டு நாட்களும் வட்டக்கச்சி பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தில் நடைபெற்றது.

சிறான் செயலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இத்தொழிற்பயிற்[illegible] ஆய்வுப்பட்டறையில், 25 இற்கு[illegible] மேற்பட்ட நிறுவனங்களைச் சேர்[illegible] பிரதிநிதிகள் கலந்து கொண்ட[illegible]

மேற்படி நிறுவனங்களால் [illegible] கொள்ளப்பட்டுவரும் பயிற்சிக[illegible] ஒருங்கிணைப்பது தொடர்பாக[illegible] இப்பட்டறையில் ஆராயப்பட்ட[illegible]

## விளையாட்டு அரங்கம்

2003 இல் நடைபெற்ற பாடசாலை மட்டத்திலான யாழ். மாவட்டப் போட்டியின்போது, நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரியின் 2004 - கலைப்பிரிவு, தோமஸ் செறின் இமோன்சியா 21 வயதுப் பிரிவுக்கான 100 m, 200 m நீளம் பாய்தல் நிகழ்வுகளில் - முதலாம் இடத்தினைப் பெற்று, மாகாணமட்டப் போட்டிக்குச் செல்லும் தகுதியைப் பெற்றுள்ளார்.



விருதுகள் பல தொடரும்

07.07.1984 ஆம் ஆண்டில் நெடுந்தீவு மத்தி, 10 ஆம் வட்டாரத்தில் பிறந்த இவர், தனது ஆரம்பக் கல்வியிலிருந்து இன்றுவரை நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரியிலேயே கல்விப் பயணத்தினைத் தொடர்ந்து வருகின்றார்.

தரம் மூன்று தொடக்கம் - பாடசாலை மட்டப் போட்டிகளில் குறுந்தூர ஓட்டங்களிலும், உயரம் பாய்தல் நிகழ்விலும் கலந்துகொண்டு, இன்றுவரை தொடர்ச்சியாக முதலாம் இடத்தினையே பெற்று வந்துள்ளார். இவர் தனி விளையாட்டுக்களில் மட்டுமன்றி, பாடசாலை மட்டத்திலான வலைப்பந்தாட்ட அணியிலும் கலந்து, பாடசாலை அணிக்கு பெருமையைத் தேடிக்கொடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர், தனது விளையாட்டு அனுபவங்கள் பற்றிக் கூறுகையில் - தான் சிறுவயதில் இருந்தே விளையாட்டுத் துறையில் ஆர்வங்கொண்டவராக இருந்தமையால், தனது தந்தையார் இதற்கென ஆக்கமும், ஊக்கமும் கொடுததமையினாலேயே நான் இந்த அளவுக்கு முன்னுக்குவருவதற்கு முடிந்ததென்றும், தனது இலக்கு - தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொண்டு, அதிலே முதலிடத்தைப் பெறவேண்டும் என்பதுதான் என்கிறார்.

அத்துடன், 'பாடசாலை ரீதியில் விளையாட்டுத்துறையில் முன்னேறுவதற்கு - எமது கல்லூரி முன்னாள் அதிபர் அருட் சகோதரி ஜெயசீலி றொட்றிக்கோ மற்றும் தற்போதைய அதிபர் அருட் சகோதரி இக்னேசியா போன்றோரே எனக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்துள்ளனர்' என்றும் நன்றியுடன் கூறுகிறார்.

'எமது பாடசாலை வரலாற்றில், உடற்கல்விப் பாடத்திற்கென ஒரு ஆசிரியர் இல்லாதபோதும், இப்பொறுப்பினை ஏற்று தங்கள் பணியினை மேற்கொண்ட ஏனைய ஆசிரியர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.'

'சிறுவயது முதலே - பாடசாலை மட்டப் போட்டிகளிலும் நெடுந்தீவு கோட்டமட்டப் போட்டிகளிலும் கலந்துகொண்டேன். அதனைத் தொடர்ந்து வலயம், மாவட்டம் எனச் செல்வதற்கு- நாட்டின் அசாதாரண சூழ்நிலை இடங்கொடுக்கவில்லை. அதன் பின்னர் - 1999 ஆம் ஆண்டில், பாடசாலை ரீதியாக முதன் முதலாக யாழ்.மாவட்டப் போட்டியில் கலந்துகொண்டு - நீளம் பாய்தலில் முதலாம் இடத்தினையும், 100 m இரண்டாம் இடத்தினையும், 200 m மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டேன். அதனைத் தொடர்ந்து 2000, 2001, 2002 ஆகிய காலப்பகுதிகளில் - தீவக வலயமட்டப் போட்டியில் மட்டுமே கலந்துகொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது. அதில் முதலிடங்களைப் பெற்றபோதும், மாவட்ட மட்டப் போட்டியில் கலந்துகொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.'

'இந்த வருடம் நாட்டின் அமைதிச் சூழ்நிலை காரணமாக, மாவட்டப் போட்டியில் கலந்துகொண்டதுடன், அடுத்து நடைபெறவுள்ள மாகாண மட்டப் போட்டியிலும் கலந்துகொண்டு சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொள்ள முயல்வேன்.'

'பாடசாலை மட்டப் போட்களில் மட்டுமன்றி, நான் எனது திறமையினை, நெடுந்தீவு சென்.ஜோன்ஸ் விளையாட்டுக்கழக அங்கத்தவராக இருந்து, பிரதேச செயலக ரீதியாக நடைபெற்ற போட்டிகளிலும் கலந்துகொண்டு நிரூபித்துள்ளேன். 2001 ஆம் ஆண்டு முதன்முறையாக, பிரதேச மட்டப் போட்டியல் 100 m, 200 m ஓட்டம் மற்றும் உயரம் பாயதல் ஆகிய நிகழ்வுகளில் முதலடத்தைப் பெற்றுக்கொண்டேன். இவ்வாண்டு நடைபெற்ற போட்டியில் கலந்துகொண்டு முதலிடத்தையும் பெற்றுள்ளதுடன், 2003 ஆம் ஆண்டுக்கான - நெடுந்தீவு பிரதேச மட்டச் சிறந்த வீராங்கனையாகத் தெரிவும் செய்யப்பட்டேன். அத்துடன், முதன்முறையாக இவ்வருடமே யாழ்.மாவட்ட மட்டப் பிரதேச செயலகப் போட்டியிலும் கலந்துகொள்ளவுள்ளேன். இதிலே 100 m, 200 m அஞ்சலோட்ட நிகழ்விலும், நீளம் பாய்தல் நிகழ்விலும் கலந்துகொள்ளவுள்ளேன்.'



# ஆர்வத்திற்கு வானமே எல்லை

'பிரதேச மட்டப்போட்டிகளில் இடங்களைப் பெறுவதற்கும், விளையாட்டுத்துறை நுட்பங்களை அறிந்துகொள்ளவும் - நெடுந்தீவுப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் க.விஜிதரன் எனக்கு பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்.'

'போதிய பயிற்சி, வசதி வாய்ப்புக்கள் குறைவாக இருக்கின்றபோதும், பலருடைய ஆதரவினால் எனது திறமையை வளர்த்துக்கொண்டேன். இருப்பினும் பாடசாலைகளுக்கென உடற்கல்வி ஆசிரியர்கள் கட்டாயமாக நியமிக்கப்பட வேண்டும். அவ்வாறு இருந்தால்தான், என்னைப்போல ஆர்வம் நிறைந்தவர்களை முன்கொண்டு வர முடியும். பாடசாலை ரீதியாகவும் சரி, பிரதேச ரீதியாகவும் சரி தொடர்ந்து பலபோட்டிகளிலும் கலந்துகொண்டு தேசிய மட்டத்தில் பதக்கம் வெல்வதே தனது இலக்கு' என்றார்.

மிகக்குறைந்த வசதிவாய்ப்புக்கள், தொலைதூரம் எல்லாவற்றையும் கடந்து சாதனை இலக்கொன்றை நோக்கி வேகமாக முன்னேறும் செறின் இமோன்சியா மேன்மேலும் பளிச்சிட எல்லோரது ஆதரவு அவருக்குக் கிடைக்க 'நமது ஈழநாடு' பத்திரிகையின் வாழ்த்துக்கள் எப்போதும் அவருக்குண்டு.

**நேர்காணல் - கண்ணன்.**

# என்றும் கல்வி எதற்கும் கல்வி

கிரிக்கெட் விமர்சகர் ஒருவர் - சங்கக்காரா பற்றி எழுதும்போது, பின்வருமாறு குறிப்பிடுகிறார். சங்கக்காரா- கிரிக்கெட் சுற்றுப்பயணங்கள் மேற்கொள்ளும்போது, வெறுமனே துடுப்புகள், கால்கட்டிகள், கைக்கட்டிகள் மட்டும் கொண்டுசெல்வதில்லை. அவற்றோடு சேர்த்து வேறுவகையைச் சேர்ந்த புத்தகங்களையும் கொண்டு செல்வார். அவை மிகக் கனதியான விடயங்கள் அடங்கிய சட்டப் புத்தகங்கள் என்கிறார் அவர்.

இதற்கொரு நியாயமுண்டு. ஏனெனில், 25 வயதுடைய குமார் சங்கக்கார - கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சட்டமாணித்துறையில் பட்டம்பெறக் கற்றுக்கொண்டிருக்கும் ஒரு மாணவன். தற்போதைய சமகாலத்தில் சட்டம் பயிலும் ஒரேயொரு சர்வதேச கிரிக்கெட் வீரர் இவராகத்தான் இருக்கமுடியும். ஆனால், பட்டத்தைப்பெற நீண்டகாலம் எடுக்கும் என்பதும் உண்மை. காரணம் கிரிக்கெட். இதன் காரணமாக இரண்டு வருடங்கள் இப்பொழுதே பிந்திவிட்டது. முதல் இரண்டு வருடச் சட்டப் படிப்பு தடையின்றி முடிய, அடுத்து வந்தது சுகமானதொரு தடை. அதுவே இலங்கை அணியில் ஒரு இடம். கடந்த 2 2/1 வருடங்களாக - அப்படி, இப்படி என்று படிப்பை ஒருமாதிரி இழுத்துக் கொண்டிருக்கிறேன். இதற்குக் கொழும்புப் பல்கலைக்கழகமும் அனுமதியளித்ததை நன்றியுடன் நினைக்கவேண்டும் என்கிறார் சங்கக்காரா. இந்த வருடத்தின் இறுதியில், விளையாட்டில் நான்கு மாத இடைவெளிவரும். அந்தக் காலகட்டத்தில் பல்கலைக் கழகத்தில் சில காரியங்களை முடிக்க வேண்டுமென்கிறார். க.பொ.த உயர்தரத்தில் ஆங்கிலம், வரலாறு, பொருளியல், கிரேக்க உரோம நாகரிகங்கள் எனும் பாடங்களைக் கற்ற இவரின் முதல் விருப்பமே, தந்தையைப் போல, தானும் ஒரு சட்டத்தரணியாக வேண்டும் என்பதே. அதுவும் கிரிமினல் சட்டத்தரணி ஆகுவதே பெருவிருப்பம்.

(கிரிக்கெட் கிரிமினல்களைக் கட்டுப்படுத்த இவர் போன்ற இன்னும் பலர் தேவைப்படுவார்கள்.)

சங்கக்கார - மனமிருந்தால் இடமிருக்கும் என்கிறார். நேர முகாமைத்துவத்தைச் சரியாக நிர்ணயிக்க முடிந்தால்- விளையாட்டையும், படிப்பையும் ஒரேநேரத்தில் செய்வதில் கஷ்டமிராது என்கிறார். தான் புத்தகங்களைக் கட்டிக் காவிக் கொண்டு சென்றாலும், காயங்கள், பயிற்சிகள் மற்றும் KEEP FIT நேரங்களால் புத்தகங்களைத் தொடமுடிதில்லை எனக் கூறுகிறார். ஒரு சட்டத்தரணியாக வருவதே தன் முதன்மை இலட்சியம் எனக் கூறும் சங்கக்கார, அதன்பின் கிரிக்கெட்டையும் தொடர்வேன் என்கிறார். இறுதியாகக் கூறும்போது, எல்லோரும் பத்தொன்பது வயதில் சர்வகலாசாலை செல்வார்கள். மாறாக, நான் சர்வதேச கிரிக்கெட்டுக்குச் சென்றேன். இருபத்தொரு வயதிலேயே பல்கலைக்கழகம் சென்றேன். இருந்தாலும் இரண்டுமே முக்கியம். இரண்டிலும் வெல்வேன் என்கிறார். இன்றைய இளந்தலைமுறையினருக்கு இவர் நல்லதொரு முன் உதாரணம். எல்லாவற்றையும்விட மேலானது படிப்பு என்கிறார். ஆனால், சர்வதேச கிரிக்கெட் வீரராயும் மிளிர்கிறார்.



குமார் சங்கக்கார
படிப்பிலும் நூற்றுக்கு நூறு


வாழ்க்கைப் பாதையில் இப்படியான கடுமையான சுகங்கள் இருக்கின்றன. இதனை உணர்ந்தாற்போலவோ என்னவோ இவரின் சாதனைகள் பற்றிப் பெரிதும் எழுதாத விமர்சகர் - இவரின் படிப்புப்பற்றி எழுதுகிறார். உண்மை தானே. கல்விக்கு ஈடு ஏது?

**- ஜோஸப் கிருஷ்ணா**

# தாரத்து இடி முழக்கம்

**சரண்யன்**

மேற்கிந்தியத் தீவுகள், இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டு டெஸ்ட் போட்டித் தொடரில் முதலாவது டெஸ்ட் போட்டி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இலங்கை டெஸ்ட் அந்தஸ்துப் பெற்று, நீண்டகாலத்தின் பின்பே இலங்கையை எதிர்கொள்ளும் சந்தர்ப்பம் மேற்கிந்தியத் தீவுக்குக் கிடைத்தது. இதுவரையில் நடைபெற்று முடிவடைந்த டெஸ்ட் தரவுகள் மேற்கிந்திய அணிக்குச் சார்பானதாக இல்லை. மொத்தமாக விளையாடப்பட்ட ஆறு டெஸ்ட் போட்டிகளில் - மேற்கிந்திய அணி வென்றது



சோபர்ஸ் முதல் சர்வான்வரை - மணல் விளையாட்டு

ஒரு ஆட்டத்தில் மட்டுமே. இரண்டு ஆட்டங்கள் சமமாக முடிவடைய, மூன்று ஆட்டங்களில் இலங்கை வெற்றி பெற்றுள்ளது. 2001 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற டெஸ்ட் ஆட்டங்கள் மூன்றிலும் தொடர் தோல்விகளை மேற்கிந்திய அணி கண்டது. அதுவும் மூன்றும் இலங்கைக்குக் குறிப்பிடத்தக்க வெற்றிகள். இரண்டாவது டெஸ்டில் இன்னிங்சாலும் முதலாவது மற்றும் மூன்றாவது ஆட்டங்களில் தலா பத்து விக்கெட்டுகளாலும் வெற்றி பெற்றார்கள். இதில் குறிப்பிடத்தக்க அம்சம், இந்தத் தொடரில் பங்குகொண்ட வீரர்கள் - இரண்டு அணிகளிலும் இப்போதும் அங்கம் வகிக்கிறார்கள். ஆனால், பிரச்சினை என்னவெனில் 2001 இல் இருந்த மேற்கிந்திய அணியல்ல இன்றிருப்பது. ஒரு கட்டத்தில் மிகத்தாழ்நிலையில் இருந்த மேற்கிந்திய அணி, தற்போது அவுஸ்திரேலிய அணியுடனான வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியின் பின் தலைநிமிர்ந்து நின்றது. அதுவும் தன் தாயகத்திலேயே, இலங்கையை மேற்கிந்திய அணி சந்திக்கிறது. இரு தரப்பும் விட்டுக்கொடுக்காத அணிகள் என்றவகையில் சுவாரஸ்யமாக இப்போட்டியை எதிர்பார்க்கலாம்.



லாரா - ராஜ பலம்


**மே.இந்திய - இலங்கை சில டெஸ்ட் தரவுகள்**

| | | |
|---|---|---|
| அதிகூடிய ஓட்டம்: | லாரா | 221 |
| | ஹசான் | 204 |
| மொத்த ஓட்டங்களின் எண்ணிக்கை: | லாரா | 826 |
| சிறந்த பந்து வீச்சு: | முரளி | 44 விக்கெட்டுகள் |
| ஒரு சுற்றில் சிறந்த பந்து வீச்சு : | சமிந்தவாஸ் | 7/71 |
| | அம்புறோஸ் | 5/37 |

# கனவாகிப்போன கனவான்கள்

கிரிக்கெட் ஆட்டம் கனவான்களின் ஆட்டம் என்ற மதிப்பை வேகமாக இழந்துவரும் இவ்வேளையில், கொஞ்சமாவது கிரிக்கெட்டின் மானத்தைக் காக்கவேண்டுமாயின், என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இவற்றுள், முன்னாள் அவுஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் டெனிஸ் லில்லி முன்வைக்கும் கருத்துக்கள் விசேட கவனத்தைப் பெறுகின்றன. இந்தக் கருத்துக்கள் டெனிஸ் லில்லியின் சுயசரிதையில் காட்டப்பட்டுள்ளன. இனிமேலும், தண்டம் விதிப்பது பிரயோசனப்படப்போவதில்லை. ஏனெனில், தண்டப் பணத்தொகை வீரர்களுக்கு ஒரு தூசாகவே இருக்கும் எனக்கூறும் அவர், எங்கு நோகவேண்டுமோ, அங்கு 'அடி விழவேண்டும்' என்கிறார். அப்படி அடிவிழுந்தால்தான் அடுத்த முறை ஒரு தவறைச் செய்யமுன் இரண்டு முறை சிந்திப்பார்கள் என்கிறார். புதிதாக சில சட்டங்களை ஆக்கமுடியும். அதாவது, முதலில் எச்சரிக்கை செய்தல். அடுத்தது மஞ்சள் அட்டை காட்டுதல். அதுவும் சரிவராவிட்டால் ஒரு SESSION ஆட்டத்துக்கு அவரை மைதானத்தைவிட்டு வெளியேற்றுதல். பிழை செய்பவர் துடுப்பாட்ட வீரராக இருப்பின் - அவரது ஓட்ட எண்ணிக்கையில் குறைக்கவேண்டும். இப்படியான கடும் தண்டனைகள் மூலம்தான் கிரிக்கெட் வீரர்களைச் சரியான திசையில் திருப்ப முடியும் என்று நம்புகிறார் லில்லி.

இன்னும் கூறுகிறார் லில்லி - BUMP BALL களை CATCH என்ற ரீதியில் வீரர்கள் கத்தி ஆர்ப்பாட்டம் செய்வது, அதோடு மத்தியஸ்தரை நோக்கிக் குழுவாக ஓடிச் சென்று APPEAL செய்தல் என்பன கண்டனத்துக்குரியன. இன்னொன்று LBW APPEAL கள் பற்றியது. பந்து வீச்சாளர் மற்றும் கிரிக்கெட் காப்பாளர் APPEAL பண்ணும் போதுமட்டும்தான் இதில் நியாயம் இருக்கமுடியும். இதனைவிடுத்து வேறெந்த நிலையில் இருந்து APPEAL செய்தாலும் அது பொருட்படுத்தப்பட வேண்டியதல்ல என்கிறார்.



டெனிஸ் லில்லி - சீரியஸா எடுக்கவேணும்!


லில்லி போன்றவர்களும் மைதானத்தில் சர்ச்சைகளுக்கு உள்ளானவர்கள் தான். ஆனால், அப்படியான சம்பங்கள் அந்தக் காலப் பகுதியில் மிகக் குறைவாகவே இருந்தன. ஆனால், இன்று அடாவடித்தனமும் கிரிக்கெட் ஆட்டத்தின் ஒரு பகுதி. அதை கிரிக்கெட்டிலிருந்து பிரிக்கமுடியாது என்பதுபோல, ஒரு அநாகரிகப் பாணி மிகவேகமாக வளர்ந்து, கிரிக்கெட்டை ஆக்கிரமித்து வருவதை அவதானிக்க முடிகிறது. இது, சர்வதேச ரீதியான கவனத்தைப் பெற்றுள்ளது என்பதே டெனிஸ் லில்லி போன்ற கிரிக்கெட் ஜாம்பவான்களின் கருத்தில் இருந்து பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. மிகவிரைவிலேயே கிரிக்கெட் தொடர்பில் ஒழுக்கக் கட்டுப்பாடுகளை நடைமுறைப் படுத்தாவிட்டால், கிரிக்கெட் ஆட்டங்களைப் பார்ப்பது, ஒரு கௌரவக் குறைவான செயல் என்று கூட அருவருப்பாகப் பார்க்கப்படவேண்டிய நிலை உருவாகலாம்.

- செந்தூரன்

# எண்ணங்கள் விசாலமடைந்தால்

இலங்கையில் - சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்கள் நடைபெறும் மைதானங்களின் தெரிவுபற்றி அடிக்கடி புகார் கூறப்படுவதுண்டு. அதாவது, 'சுற்றிச்சுற்றி சுப்பற்றை கொல்லைக்குள்' என்பதுபோல, கொழும்பை மையமாக வைத்தே ஆட்டங்கள் நிர்ணயிக்கப்படுவதாக ஒரு குற்றச்சாட்டு. இங்கிலாந்து - இலங்கை வருகைதரும் போதும், இரண்டு டெஸ்ட் ஆட்டங்களை கொழும்பில் நடாத்த முடிவு செய்திருந்தது - கண்டனத்துக்கு உள்ளாகி இருந்ததால்தான் - தற்போது மூன்று டெஸ்ட்களில், இரண்டைக் கொழும்புக்கு வெளியே நடாத்துவதுடன், ஒன்றை மட்டும் கொழும்பில் நடாத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதாவது, முதலாவது டெஸ்ட் போட்டி காலியிலும், இரண்டாவது டெஸ்ட் போட்டி கண்டியிலும் நடாத்த ஏற்பாடாகியுள்ளது. இதேவேளை, மூன்று ஒருநாள் போட்டிகளையும் கொழும்பில் நடாத்த - முன்னர் உத்தேசிக்கப்பட்டிருந்தாலும், தற்போது ஒரு ஆட்டத்தைத் தம்புள்ள 'ரண்கிரி' மைதானத்தில் நடாத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது. இதேவேளை, நாடளாவிய ரீதியில் மைதானங்கள் விருத்திசெய்யப்பட வேண்டுமென்ற குரல் ஓங்கியொலிக்க ஆரம்பித்துள்ளது.

குருநாகல் - வெவகெதர ஸ்ரேடியம், சர்வதேசத் தரம்வாய்ந்ததாக அபிவிருத்தி செய்யப்படுவதற்கு வாய்ப்புகள் இருந்தாலும், மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் - குருநாகல் புறக்கணிக்கப்படுகிறது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. இதேவேளை, இலங்கையின் உலர் வலயப் பிரதேசங்களில், சில மைதானங்கள் அமைவது, வருடம் முழுவதும் காலநிலைப் பாதிப்பின்றிக் கிரிக்கெட் ஆட்டங்களை நடாத்த உதவுமென்பது, புவியியல் ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து. தென்மேல் பருவமழைக் காலத்தில் - உலர்வலயத்தில் ஆட்டங்களை நடாத்த வாய்ப்பாக இருக்கும். அதேவேளை, வடகீழ்ப் பருவமழைக் காலம் - ஈரவலயத்தில் ஆட்டங்களை நடாத்த உதவும். இங்கு என்ன பிரச்சினையென்றால், உலர்வலயப் பிராந்தியங்களில் - அது அனுராதபுரமாக இருந்தாலென்ன, யாழ்ப்பாணமாக இருந்தாலென்ன - தலைநகர முகாமையாளர்கள் இங்கெல்லாம் கிரிக்கெட் வளர்வதற்கு என்னென்ன திட்டங்களை வரைந்தார்கள், அமுல்படுத்தி வெற்றி கண்டார்கள் என்பதெல்லாம் கேள்விக்குறியாகவே உள்ளன. நிறைய ஆதரவு இருந்தால், பங்களிப்பு நிறையவே இருக்கும். வளர்ச்சியும் இருந்திருக்கும். எனவே - கிரிக்கெட் ஆட்டம் என்பது சில பிராந்தியங்களில்தான் சிறப்பாக விளையாடப்பட முடியும், மிக்க உயர்தர வசதி வாய்ப்புக்கள் உள்ள நகரங்களில்தான் விருத்தி செய்யமுடியும் என்று தீர்மானித்தால் - கிரிக்கெட் அவ்வளவுதான். இறுதிவரை குண்டாஞ் சட்டிக்குள் குதிரை ஓட்டவேண்டியதுதான்.



மைதானங்கள் மகத்தானவை

எனவே, இலங்கையின் சகல பகுதிகளிலும் வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும். தம்புள்ள நகரில் ஒரு சர்வதேச கிரிக்கெட் மைதானம் வெற்றிகரமாக அமைக்கப்பட முடியுமாயின், யாழ்ப்பாணத்திலும் அதேயளவு வெற்றிகரமான பிரதிபலன்கள் கிடைக்கக்கூடிய ஒரு சர்வதேசக் கிரிக்கெட் அரங்கை நிர்மாணிக்க முடியும். மிகத் திறமையான வீரர்களையும் உருவாக்கமுடியும். 1977 களில் யாழ்ப்பாணத்தில் ஒரு சர்வதேசத் தரம்வாய்ந்த கிரிக்கெட் மைதானம் அமைப்பது பற்றிய பேச்சுக்கள் எழுந்ததாக ஒரு ஞாபகம் இருக்கிறதல்லவா...?

- நிர்மலன்.

# முதல் மரியாதை


**500** ஒருநாள் விக்கெட்டுக்கள், 414 டெஸ்ட் விக்கெட்டுக்கள் ஒரு சாதனை. இதற்குரியவர் வாசீம் அக்ரம். பாகிஸ்தான் கிரிக்கெட் வரலாற்றில் - வசீம் அக்ரம் என்றும் பேசப்படுவார். உலகக்கிண்ணத் தோல்விகளின் பின் பாகிஸ்தான் அணியிலிருந்து நீக்கப்பட்ட சிரேஷ்ட வீரர்களில் அக்ரமும் ஒருவர். அத்தோடு, தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையை முடித்துக்கொள்வதாக அறிவித்திருந்தார்.



ஆனாலும், இங்கிலாந்து கவுன்ரி அணி - ஹம்ப்ஷயருக்காக ஆடிக்கொண்டிருக்கிறார். பாகிஸ்தான், தன் ஒரு பெருமை மிகு புதல்வனை மறப்பதாக இல்லை. இதனால் தான் அவருக்கு மாபெரும் பிரியாவிடைகொடுக்க பாகிஸ்தான் கிரிக்கெட்சபை தீர்மானித்துள்ளது. இதன்படி, ஓய்விலிருந்து விடுபட்டு ஒரேயொரு போட்டியில் மட்டும் விளையாட (பிரியாவிடைப் போட்டி) அக்ரத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதனை அக்ரமும் ஏற்றுக்கொண்டுள்ளார். அந்த வகையில், தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடர் நடைபெறும்போது, அதில் ஒரு ஆட்டத்தில் கலந்துகொள்வதாக உறுதியளித்துள்ளார் வசீம் அக்ரம்.

- தீபா.

# ஆவேசங்கள் ஓடிப் போகட்டும்



கிறீன் - நிரூபிப்பேன்!

**வே**கமான மனிதன் யார் என்பது, அடுத்த ஒலிம்பிக் போட்டிகளில் தெரியும். அதற்கிடையில், பல வேகமான மனிதர்கள் வந்துபோவார்கள். ஆனால், இருவல்லவர்கள் பற்றியே கூடிய அவதானம் இருக்கும். அவர்கள் இரண்டு அமெரிக்கர்கள். ஒருவர் மொறிஸ் கிரீன், மற்றவர் ரிம் மொண்ட் கொமரி. இந்த நவநாயகர்கள் இருவர் பற்றிய குறிப்பொன்றை எழுத முனையும்போது - அவர்களின் "வார்த்தையாடல்கள்" பற்றியே எழுதவேண்டி ஏற்படுவது துயரம்.

என்னை மதிக்காத யாரையும் நான் மதிக்கத்தயாராக இல்லை என்று கிறீனுக்கு மறுத்தான் கொடுக்கிறார் மொண்ட்கொமரி. பத்திரிகையாளர் மாநாடொன்றில் - உமது உலக சாதனையை மீண்டும் பெற்றுக்கொள்ள இயலுமா என்றும் சவால் விடுகிறார்.

இதற்கும் பதிலளிக்கும் கிறீன் - நிச்சயம் நான் சாதனையை வென்றெடுப்பேன் என்கிறார்.

இதோடு வாய்ச்சண்டை முடியவில்லை. அமெரிக்கன் தெரிவுப் போட்டிகளில் 200 m ஓட்டத்திலேயே கிறீன் பங்குகொள்கிறார். ஏனெனில், தற்போதைய சம்பியன் என்ற வகையில் இயல்பாகவே 100 m ஓட்டத்துக்கு கிறீன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஆனால், மொன்ட்கொமரி இங்கும் விடுவதாக இல்லை. சாதனைப் பிரச்சினை. 100 m ஓட்டத்திலேயே ஒழிய, 200 m இல் அல்ல. எனவே, அவர் 100 m போட்டியில் அல்லவா பங்குகொண்டு தன்னை நிரூபிக்கவேண்டும் என்று சீண்டுகிறார்.

மொன்ட்கொமரி - அவரை ஒரு வீரராக மதிக்கிறேன். ஆனால், ஓட்டத்தடத்தில் - மற்றைய ஏழுபேரை மதிக்காத ஒருவரை, மனிதனாக மதிக்கத் தயாராக இல்லை என்கிறார்.

அப்படியல்ல என்கிறார் கிறீன். நான் எல்லோரையும் மதிக்கிறேன். நீ மற்றவர்களை மதிக்கத் தயங்கும் அந்தக் கணத்திலேயே, அழிவைத் தேடிக்கொள்பவராகிறார் என்று கூறுகிறார் கிறீன்.


இப்படியாக உலகின் இரண்டு நட்சத்திரங்கள் வாய்த்தர்க்கம் புரிய ஆரம்பித்திருக்கிறார்கள். பாரிஸ் வேர்ள் சாம்பியன்ஷிப் நெருங்க நெருங்க, தேவையில்லாத அனல் வீசுகிறது போலத்தெரிகிறது . ஒலிம்பிக் அண்மிக்கும்போது, இது எரிமலையாக வெடிக்குமோ தெரியவில்லை. ஆனால், இது வேண்டாம் என்பதே ரசிகர்களின் விருப்பம். யார் வல்லவர் என்பதை உங்கள் ஓட்டம் சொல்லட்டும். வாய்த்தர்க்கம் வேண்டாம்.

இது ஒருபுறமிருக்க, அமெரிக்க நாட்டின் கலிபோர்ணிய சக்ரமன்டோ பள்ளத்தாக்கில் நடைபெற்ற NCAA தடகளப் போட்டிகள் - இன்னொரு திசையில் பார்வையைத் திருப்புகின்றன. ஏனெனில், ஐக்கிய அமெரிக்கர்களில் மைக்கல் ஜோன்சன் 400 m ஓட்டத்தைத் தன்வசம் வைத்திருந்த போது இருந்த விளம்பரம், மைக்கல் ஜோன்சன் ஓய்வுபெற்ற பின் சிறுது குறைந்திருந்தது என்றே கூறவேண்டும். ஏனெனில்- அந்தக் கம்பீரமான மனிதன் மைக்கல் ஜோன்சனாலேயே 400 m ஓட்டம் என்பதும் பெருமை பெற்றிருந்தது.



மொன்ட்கொமரி - நான் நம்பர் வண்!

ஆனால், புதியதொரு அலை அமெரிக்காவில் திடீரென்று அடித்துள்ளது. இந்த வருடத்தின் வேகமான 400 m சாதனை நேரம், இதுவரை ஐக்கிய அமெரிக்காவிற்கு வெளியே அறியப்பட்டிராத அடம் ஸ்ரீல் எனும் 22 வயதான இளைஞன்-



மைக்கல் ஜோன்சன் - சகாப்தம்!

44.57 செக்கனில் 400 m கடந்து வெற்றி பெற்றுள்ளான். இரண்டாவதாக வந்த ஏடிஸ் ஹரிசும் இதேநேரத்தில் ஓடியிருக்க, மூன்றாவதாக வந்த மிட்ச் பொட்டர் எடுத்துக் கொண்ட நேரம் 44.58 செக்கன்.

இதேவேளை, ஐக்கிய அமெரிக்காவின் யுவதி சன்யா றிச்சட்ஸ் 50.58 செக்கனில் 400 m தூரத்தை ஓடித் தனது சாதனை நேரத்தைத் தானே கடந்துள்ளார்.

இதேவேளை, அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த அலிஸ்ரர் கிரெய்க் 5000 m முதலிடத்தையும் (13 நிமிடம் 47.87செக்.), அமெரிக்காவின் லூச்சினி (13.49.81) இரண்டாம் இடத்தையும், கென்யாவின் றொபட் செசேரட் (13.52.17) செக்கன்களிலும் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டார்கள். பத்துக் கிலோமீற்றர் தூர ஓட்டப்போட்டியில் - மிக நெருக்கமாக (PHOTO FINISH) முடிவிடத்தை நெருங்கிக்கொண்டிருந்தவர்கள் அலிஸ்ரர் கிரெய்க்கும், டான் லிங்கனும்.

அலிஸரர் கிரெய்க் ஆர்கன்சாஸ் பல்கலைக்கழகத்தில் ஒரு பட்டதாரி மாணவன். லிங்கன் அங்கு பயின்ற ஒரு பட்டதாரி. இவர்கள் இருவரும் முடியுந்தறுவாயில் ஒருவர் கையை ஒருவர் கோர்த்துக்கொண்டே ஓடிவர, இறுதியில்- கிரெய்க், தன் பல்கலைக்கழக சிரேஷ்ட உறுப்பினருக்கு வழிவிட்டு விலகி, லிங்கனை முதல்வனாக்கி, தான் இரண்டாவதாகிக் கொண்டார். லிங்கனின் நேரம் 28.20.20, கிரெய்க்கின் நேரம் 28.20.29, இந்த வர்த்தகப் போட்டி உலகத்தில் - இப்படியும் ஒரு சம்பவம் மனிதனுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறதல்லவா.

மக்டலீன் மரியா

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்*
*நோயின்மை வேண்டு பவர்.*

- திருக்குறள்

# நமது நோக்கு

## தேசத்தைச் சுரண்டுபவர்!

யாழ். குடாநாட்டில் சற்றே ஓய்ந்திருந்த இயற்கை வளச் சுரண்டல், மீண்டும் திடீரென வேகமெடுப்பதான அறிகுறிகள் தென்படுகின்றன.

சூழல் பாதுகாப்புப் பிரிவினரின் தீவிர கண்காணிப்பையும் மீறியவாறு - மண் கடத்தலும், பச்சை மரங்கள் தறிப்பதும் - குடாநாட்டின் பல பகுதிகளிலும் சட்டவிரோதமான முறையில் தொடருவதான தகவல்கள் கிடைத்துவருகின்றன.

சில இடங்களில், படையினரின் ஆசீர்வாதத்துடனும், ஒத்துழைப்புடனும், கண்டும் காணாமல்விடும் போக்குடனும் மேற்கொள்ளப்படும் இத்திருட்டுக்கள்- எமது இயற்கைவளத்தைச் சிதைக்கும் துரோகத்தனம் என்பதில் சந்தேகமில்லை.

கட்டுமானத் தேவைகளுக்காக மணல் தேவைப்படுமிடத்து - அதனைப் பெற்றுக்கொள்ள உரிய வழிமுறைகள் செய்யப்பட்டுள்ளன. எங்கெங்கு மணல் அள்ளமுடியும், எவ்வளவு மணல் அள்ளினால் சூழலின் சமநிலை கெடாது என, சூழல்பாதுகாப்புப் பிரிவினரால் நன்கு ஆராய்ந்து - மணல் பெறுவதற்கான ஒழுங்கமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி - உரியவாறு மணல் அள்ளும் பணி சமீபகாலமாக, ஒரு சீரான நடைமுறைக்குள் கொண்டுவரப்பட்டாலும் -

கொள்ளை இலாபமடித்துப் பழக்கப்பட்ட சிலர்- சுற்றுச்சூழலின் சமநிலை பற்றியோ, அது மீறப்படுவதால் ஏற்படக்கூடிய உடனடி மற்றும் நீண்டகாலப் பாதிப்புக்கள் குறித்தோ கவலைப்படாது, சட்டவிரோத மண்அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு திருட்டு மண் அகழ்வு நடைபெறும் சில பகுதிகளில், நியாயம் கேட்கச்சென்ற பொதுமக்கள் அச்சுறுத்தப்பட்ட சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

ஏற்கனவே தொடர்ந்து ஆண்டுகள் கணக்கில் நீடித்த போரினால், தமிழர் தாயகத்தின் இயற்கை வளம் சின்னாபின்னப்பட்டு சிதைக்கப்பட்டிருக்கும் நிலையில் - அடாத்தாக, குறுகிய நோக்கம் கொண்டு எமது வளத்தை நாமே சுரண்ட நினைப்பது - எமது கண்களை நாமே எமது விரல்களால் குத்திக்கொள்வதற்கு ஒப்பானதாகும்.

யாழ். குடாநாட்டைப் பொறுத்தளவில் - கடலரிப்பு அபாயங்களும், நிலத்தடிநீர் பற்றிய அச்சுறுத்தலும் எதிர்காலத்தில் மிகமுக்கிய பிரச்சினைகளாக இருக்கும் என எதிர்வு கூறப்பட்டுவரும்போது -

கண்மூடித்தனமாக மண்ணகழ்வு நடைபெற்றால், அது - எட்டநிற்கும் ஆபத்தை, கிட்டக் கொண்டு வந்துவிடும் என்பதைக் கவனத்திற்கொள்ளாமல் - நூறுகளுக்கும், ஆயிரங்களுக்கும் ஆசைப்பட்டு, சட்ட விரோதமாக மண்ணகழ்வது - சமூகத்தை, தாயகத்தை சிறுகச்சிறுக அழிக்கும் வேலையேயன்றி வேறல்ல.

நாவற்குழி, கச்சாய், அரியாலை ஆகிய பிரதேசங்களிலும், இப்போது மட்டுவில் போன்ற பகுதியிலும் கூட மண் திருட்டு அதிகளவில் நடைபெறுவதாகப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது ஒருபுறமிருக்க - பசும் மரங்களை கட்டுப்பாடின்றித் தறித்துத் தமது தேவைகளுக்குப் பயன்படுத்துவோரும், விற்பனை செய்வோரும் குடாநாட்டில், அண்மைய நாட்களில் தமது வேலைகளைக் காட்டத் தொடங்கியிருக்கின்றனர்.

அண்மையில், காரைநகர்ப் பகுதியில் இருந்து பச்சை மரங்களைத் தறித்து, வெளியிடங்களுக்குக் கொண்டுசென்று வியாபாரம் செய்துவந்த சிலர் சிக்கியதைத் தொடர்ந்து - சூழல் பாதுகாப்புக் குழுவினர் - காரைநகரில் பச்சை மரங்கள் வெட்டுவதையும், வெளியிடங்க்ளுக்குக் கொண்டுசெல்வதையும் தடைசெய்துள்ளனர்.

இயற்கை வளங்களைப் பாதுகாப்பது, எமது தேசத்தைப் பாதுகாப்பதற்கு ஒப்பானதாகும். இந்த வகையில் - தேசத்தின் எதிர்காலத்திற்காக, இந்தத் தாய்மண்ணின் விடுதலைக்காக ஆயிரக்கணக்கான போராளிகள் தம் இன்னுயிர்களைத் தியாகம் செய்திருக்க -

குறுகிய ஆதாயம் கொண்டு, எமது தேசத்தின் வளங்களைச் சுரண்டிக் கெடுக்க நினைப்பவர்களை,

தாய்மண்ணின் வளத்தைச் சூறையாடிக் கெடுப்பவர்களை - நாடும் மன்னிக்காது, மக்களும் மன்னிக்கமாட்டார்கள்.

எனவே - மணல் திருட்டுக்களிலும், பசும் மரங்களை வெட்டி விற்பதிலும் ஈடுபடுபவர்கள் தாமாகத் திருந்தவேண்டும். இல்லை, மக்களாகத் திருத்தும் சந்தர்ப்பமே அவர்களுக்குக் கிடைத்துவிடும்.

### தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால்

# கிளிநொச்சி அபிவிருத்தித் திட்டங்களுக்கு மூன்று கோடி 28 லட்சம் ரூபா செலவீடு!

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் இவ்வருடத்தில் மூன்று கோடியே 28 லட்சத்து 57 ஆயிரம் ரூபா செலவில் - கிளிநொச்சி மாவட்டத்தில் அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கழக இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தித் திட்டங்களின்கீழ் - கல்வி அபிவிருத்திக்கு 75 லட்சத்து 57 ஆயிரம் ரூபாவும், சுகாதார சேவைக்கு 19 லட்சத்து 14 ஆயிரம் ரூபாவும், குடிநீர் விநியோகத்திற்கு 35 லட்சம் ரூபாவும்-

இருப்பிட வசதிகளுக்கு 2 லட்சத்து 64 ஆயிரம் ரூபாவும், நிவாரணப்பணிகளுக்கு 81 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும், விவசாய நீர்ப்பாசன அபிவிருத்திக்கு 31 லட்சத்து 99 ஆயிரம் ரூபாவும், மீள்குடியமர்வுக்கு ஒரு லட்சத்து 72 ஆயிரம் ரூபாவும், கடற்தொழில் மற்றும் கைத்தொழில் அபிவிருத்திக்கு 18 லட்சம் ரூபாவும்-

சுயதொழில் முயற்சி ஊக்குவிப்புக்கு 37 லட்சம் ரூபாவும், உட்கட்டுமானப் பணிகளுக்கு 4 லட்சத்து 77 ஆயிரம் ரூபாவும், மனிதவள மேம்பாட்டுச் செயற்பாடுகளுக்கு 19 லட்சம் ரூபாவும், போஷாக்கை மேம்படுத்தும் திட்டத்திற்கு 19 ஆயிரம் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கே இந்த நிதி பயன்படுத்தப்பட்டதாகவும் தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (43)

## சமாதான முன்னெடுப்பில் பொதுமக்கள்; யாழ்ப்பாணத்தில் பயிற்சிப் பட்டறை!

### 28ம் திகதி நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

சமாதான முன்னெடுப்புக்களில் மக்களையும், மதத் தலைவர்களையும் பங்கேற்கச் செய்யும் வகையில் - வீடு வீடாகச் சென்று, மக்களின் ஆதரவினைத் திரட்டுவது தொடர்பான பயிற்சிப் பட்டறையொன்றை "உலக ஒத்துழைப்பு மன்றம்" யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி வை.எம்.சி.ஏ மண்டபத்தில் இந்த ஆய்வுப்பட்டறை இடம்பெறவுள்ளது. மறுநாள் 29 ஆம் திகதி- மதத்தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரசியற்கட்சிகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோரைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களைச் சந்தித்து, அவர்களின் உடனடிப் பிரச்சினைகளான - உயர்பாதுகாப்பு வலயம், உள்ளூரில் மீள்குடியேற்றம், மீன்பிடி மற்றும் விவசாயம் மேற்கொள்ளவதில், எதிர்நோக்கப்படும் இடர்கள், பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றி ஆராயப்படவுள்ளதுடன் - அரசியலமைப்புச் சீர்திருத்தம், அதிகாரப் பங்கீடு, மனித உரிமைகள் போன்றன பற்றியும் மக்களின் கருத்துக்களை கேட்டறிந்து - அவர்கள் மூலம் பெறப்படும் கருத்துக்களை, இலங்கையிலுள்ள அனைவருக்கும் பரப்பவும் ஏற்பாடு செய்யப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

## அமெரிக்கத் தூதுவர் நியமனம் செனெற்சபை உறுதி செய்தது!

(கொழும்பு)

இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவராகத் தெரிவுசெய்யப்பட்ட ஜெப்ரி ஜே லன்ஸ்ரிட்டின் நியமனத்தை, அமெரிக்க செனெற் உறுதி செய்துள்ளது.

1977 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் வெளிவிவகார சேவையில் இணைந்த இவர் - பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்தியா ஆகிய நாடுகளில் பணியாற்றினார். அத்துடன், ஆப்கானிஸ்தானில் தென்னாசியப் பிரிவு இணைப்பாளராகவும் இவர் இருந்துள்ளார்.

இறுதியாக இவர், சூழல் செயற்பாட்டு அலுவலகப் பணிப்பாளராக வொஷிங்ரனில் கடமையாற்றினார். கலைமாணிப் பட்டதாரியான இவர்- ரொட்ரேடாம் பல்கலைக்கழகத்தில் 1969 ஆம் ஆண்டில், தெற்காசியக் கற்கைகள் பற்றிய விடயத்துக்காக கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார்.

ஆசிய மொழிகள் பலவற்றில் பரிச்சயமான இவர், 1969 - 70 காலப் பகுதியில் அமெரிக்கக் கடற்படையில் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

## திருத்தப் பணிகள் நடைபெறுவதால் பரந்தன் - பூநகரி வீதியில் தடை!

பரந்தன் - பூநகரி வீதியில் திருத்த வேலைகள் இடம் பெறுவதால், இந்தவீதியின் ஒருபகுதி போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருப்பதாக, தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

பரந்தன் - பூநகரி வீதியில், பரந்தன் சந்தியிலிருந்து குமாரபுரம் ஊடாக, ஓவசியர் சந்திவரையான வீதியே போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வீதிப் புனரமைப்புப் பணிகள் இடம்பெறுவதால், இந்த வீதியூடான போக்குவரத்துத் தடைசெய்யப்பட்டிருப்பதால், கரடிப்போக்குச் சந்தியினூடாக பொறிக்கடவை ஓவசியர் கடைச் சந்திவரையான பாதையைப் பயன்படுத்துமாறும் கேட்கப்பட்டுள்ளது.

# தொண்டராசிரியர் நியமனத்தில் எந்த இனப்பாகுபாடும் இல்லை!

### மாகாணக் கல்வி அமைச்சு அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் தொண்டராசிரியர்களுக்கு வழங்கப்பட்ட நிரந்தர நியமனங்களில், எந்தவிதமான இனப்பாகுபாடும் காட்டப்படவில்லையென்று, வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

குறிப்பிட்ட திகதிக்கு முன்னர், சேவையாற்றிய தொண்டராசிரியர்களுக்கே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நிரந்தர நியமனம் வழங்கப்பட்டோரில் - 786 தமிழரும், 133 முஸ்லிம்களும் அடங்குகின்றனர். இதில் எந்த இனப்பாகுபாடும் காட்டப்படவில்லை.

இந்த நியமனங்களில் இனப்பாகுபாடு காட்டப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக எழும் எந்தச் சட்டப் பிரச்சினைகளையும் முகங்கொடுப்பதற்குத் தயாராகவுள்ளோம் என அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - புதிதாக நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட 909 தொண்டராசிரியர்களும், தமது கடமையை 14 நாட்களுக்குள் பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும்.

தவறினால், நியமனங்கள் உடனடியாக ரத்துச் செய்யப்படும் என்று வட-கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை - நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட தொண்டராசிரியர்கள், தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் குறிப்பிட்ட பாடசாலையில் பணியாற்ற வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பல்கலைக்கழகக் கல்வியை மறுசீரமைக்க நடவடிக்கை!

### மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர் கபீர் காசிம்

மாணவர்கள் - நவீன உலகைத் தரிசிக்கக்கூடிய வகையில், பல்கலைக்கழகக் கல்வியை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக, மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் கபீர் காசிம் தெரிவித்தார்.

பல்கலைக்கழகக் கல்வியை மறுசீரமைக்கும் புதிய திட்டத்தின்படி, புதிய கற்பித்தல் வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இதற்காகப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படும்.

அத்துடன் - புதிய பாடங்களும், பல்கலைக்கழகங்களில் அறிமுகப்படுத்தப்படும். மாணவர்கள் மேற்கொள்ளும் ஆராய்ச்சிப் படிப்புக்களுக்கான நிதியுதவிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அரசாங்கம், 40 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பல்கலைக்கழகங்களின் அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர் கபீர் காசிம் தெரிவித்தார். (01)

### முல்லைத்தீவுக் கடலில்

## கடற்படைப் படகு மோதியதில் மீன்பிடிப் படகு மூழ்கியது!

முல்லைத்தீவுக் கடற்ப்ரப்பில், மீன்பிடிப்படகு ஒன்றை கடற்படையின் ரோந்துப் படகு மோதி மூழ்கடித்துள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு ஏழு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு - மணற்குடியிருப்பைச் சேர்ந்த பிலிப்பையா பாக்கியநாதன் (வயது - 47) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தை, கடந்த புதன்கிழமை மாலை 3 மணிக்கு மீன்பிடிப்பதற்காகக் கடலுக்குச் சென்றிருந்தார்.

இவர் - மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இரவு 7 மணியளவில் கடற்படையின் ரோந்துப் படகு ஒன்று வேகமாக வந்து, இவரது படகுமீது மோதியது. கடற்படைப் படகைக் கண்டு கடலுக்குள் குதித்ததால், அதிலிருந்து மீனவர் உயிர் தப்பி நள்ளிரவில் கரைசேர்ந்தார்.

கடற்படையால் மோதப்பட்ட மீன்பிடிப்படகு நீரில் மூழ்கியது. இது புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட படகு என்றும், வாங்கி மூன்றாவது நாளிலேயே தாம் அதனை இழந்துவிட்டதாகவும் குறித்த மீனவர் தெரிவித்தார்.

# இடைக்கால நிர்வாக சபையில் தங்கிநிற்கும் தென்னிலங்கையின் அரசியல் ஸ்திரநிலை!

## தெற்குத் திசையினிலே...

### கொழும்பிலிருந்து இந்திரஜித்

ரோக்கியோ மாநாட்டில் கிடைத்த நிதி யுதவியைக் கொண்டு மீண்டுமொரு நீண்ட ஆட்சியை நடத்தலாமென, ஐக்கிய தேசியக் கட்சி நினைத்துப் பார்க்க முடியாமல் இருக் கிறது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெய வர்த்தனவின் காலப்பகுதியில், ஐக்கிய தேசி



ரணில் விக்கிரமசிங்க

யக் கட்சி - 17 வருடகால அசைக்கமுடி யாத ஆட்சியைத் தக்கவைத்திருந்தது. அப் போது - சிறிமாவோ பண்டாரநாயக்கவின் சிறி லங்கா சுதந்திரக்கட்சி, பலமான எதிர்க்கட்சி யாகவன்றி, ஒரு சாதாரண கட்சியைப்போலவே செயற்படவேண்டியிருந்தது. 1978 ஆம் ஆண் டில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டுவந்த அர சியலமைப்பு சீர்திருத்தமே, இந்த நிலைக்கு வழிவகுத்தது. அந்த அரசியலமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை, நாட்டில் 'சர் வாதிகாரம்' என்ற நிலைமைக்குக் கொண்டு சென்றிருந்தது.

எனினும், அரசியலமைப்புக்குள் இருந்த ஓட்டைகளைக் கொண்டு, ஜனாதிபதி ஒருவரை நாடாளுமன்றம் ஆட்டிப்படைக்கும் திறனைக் கொண்டிருந்தபோதும்- அதனை ஜே.ஆர். ஜெயவர்த்தன மிகுந்த புத்திசாதூரியமாகக் கையாண்டு, தான் நடைமுறைப்படுத்திய அரசியலமைப்புக்குள் இருந்த சாதகமற்ற நிலைகளை அவர் சமாளித்துக்கொண்டார்.

அதன் ஒருகட்டமே, நாடாளுமன்ற உறுப் பினர்கள் அமைச்சர்களாகப் பதவி ஏற்கும் அதேநேரம், 'பதவி விலகல்' கடிதங்களை வழங்கவேண்டுமென்ற உத்தரவாகும். இந்த உத்தரவு காரணமாக ஜே.ஆரின் ஆட்சி தென் னிலங்கையைப் பொறுத்தவரை முழுமை பெற் றதாக இருந்தது. அவரது ஆட்சிக்காலத்தின் இறுதியில் - இந்திய, இலங்கை ஒப்பந்தத்தை எதிர்க்கும் பாணியில் முன்னாள் பிரதமர் ரணசிங்க பிரேமதாஸா - குற்றவியல் பிரே ரணை ஒன்றை, ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கு எதிராகக் கொண்டுவர முயற்சித்தபோது, அது வும் பின்னர் ஜே.ஆரின் அரசியல் தந்திரத் தினால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

இவ்வாறு - 17 வருட ஆட்சியில் மூன்றில் இரண்டு பங்கினை, தமது கட்டுக்குள் வைத் திருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் சாதுரிய மான செயற்பாடுகள், அவரை அசைக்க முடி யாத மனிதனாக தென்னிலங்கையில் காட்டிக் கொண்டிருந்தது.

ஆனால், வடக்கு - கிழக்கு உரிமைப் போராட்டத்தைப் பொறுத்தவரையில், ஜே.ஆர். ஜெயவர்த்தன கொடூரம் நிறைந்த சர்வாதி காரியாகத் தென்பட்டார். இறுதியாக, தமது அரசியல் மூளையைப் பயன்படுத்தி எந்த நாடு இலங்கையின் தமிழ்ப் போராளிகளுக்குப் பாதுகாப்பும், பயிற்சியும் வழங்கியதோ, அந்தப் போராளிகளுக்கும் - குறித்த நாட்டுக்கு மிடையில் மோதல்நிலை ஒன்றை உரு வாக்குவதில் ஜே.ஆர். வெற்றிகண்டார் என்றே கூறவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்டகால ஆட்சிக்கு, அவரின் செயற்பாடுகளே முதன்மை பெற்றிருந்தது என்பதை உணர்த்துவதற் காகவே அவரைப்பற்றி அதிமாகக் கூற வேண்டியுள்ளது. 1978 ஆம் ஆண்டின் பின்னர், இலங்கையில் வடக்கு - கிழக்குப் போர் உக்கிரமடைந்து வந்தபோதிலும், தென்னிலங் கையைப் பொறுத்தவரையில் வடக்கு - கிழக்கு யுத்தம் வேறொரு நாட்டில் நடப்ப தாகவே, எண்ணம் ஏற்பட்டிருந்தது. இதற்கு ஆட்சியாளர்களின் கபடத்தனமான ஆட்சிக் கொள்கையே காரணமாகும்.

இந்தக் காலகட்டத்தில், தென்னிலங்கை யில் பாரிய அபிவிருத்திகள் மேற்கொள்ளப் பட்டன. இலங்கை அபிவிருத்தி அடைந்து வரும் நாடு என்ற எண்ணம், மக்கள் மனதில் உருவாகியிருந்தது. இதுவும் ஐக்கிய தேசி யக் கட்சியின் நீண்டகால ஆட்சிக்குத் துணை புரிந்திருந்தது.

எனினும், ரணசிங்க பிரேமதாஸவின் ஆட்சியின் பின்னர் - தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆட் சியைப் பொறுப்பேற்றதையடுத்து, வடக்கு- கிழக்கு யுத்தம் - இலங்கையின் அனைத்துப் பகுதிகளுக்கும் உரித்தானது என்ற கருத்து தென்னிலங்கை மக்கள் மத்தியில் உருவானது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவைக் காட்டிலும், அதிகளவு மக்கள் வாக்குகளைப் பெற்று ஆட்சி அமைத்த ஜனாதிபதி சந்திரிகா பதவி யேற்ற வேளையில், ஐக்கிய தேசிய கட்சி அஸ்தமிக்கப்போகிறது என்றே அனைவரும் கருதினர். ஜே.ஆர். மற்றும் பிரேமதாஸ போன் றோர் இல்லாத நிலையில் ரணில் விக்கிரம சிங்கவினால் கட்சியைக் கொண்டு செல்ல முடியாது என்ற கருத்தே வெளிப்படையாகக் கூறப்பட்டுவந்தது.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சி யில் ஏற்பட்ட தளம்பல் கொள்கைகள், ரணிலை மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறவைத்து விட்டது. அதுவும், நிறைவேற்று அதிகாரம் கொண்டவராக சந்திரிகா இருக்கும்போது, அவரைப் பொருட்படுத்தாமல் நாட்டின் ஆட் சியை நடத்திச்செல்லும் ஆளுமை ரணிலுக் குக் கிடைத்திருக்கிறது. என்றாலும், முன்னர் தமது கட்சித் தலைவர்கள் ஏற்படுத்தியிருந்த ஸ்திர ஆட்சியை ரணில் விக்கிரமசிங்கவினால் தற்சமயம் ஏற்படுத்த முடியாமல் இருக்கிறது.

ஜனாதிபதி தமது அதிகாரத்தைப் பயன் படுத்தி ஆட்சியைக் கலைத்துவிடுவாரோ? என்ற அச்சத்திற்கு மத்தியில், சர்வதேசத்தின் ஆதரவுடன் (இந்தியாவைத் தவிர) ரணில் விக்கிரமசிங்க ஆட்சி நடத்தி வருகிறார். இறு



சந்திரிகா குமாரதுங்க

தியாக, ரோக்கியோவில் கிடைத்த நிதியுத விகள் அவரின் ஆட்சியை ஸ்திரப்படுத்தும் வலிமையைக் கொண்டிருக்கின்றன. ஆனால், இலங்கையின் அரசியல் சக்திகள் அதற்கு இடந்தருவதாக இல்லை.

ஜனாதிபதியின் பொதுஜன ஐக்கிய முன்னணி, 'ரோக்கியோ' நிதியுதவிகளை நிராகரித்தது. ஆனால், அதே கட்சி 'ரோக் கியோ' மாநாட்டில் - தமிழீழ விடுதலைப் புலிகளைப் பங்குகொள்ளச் செய்வது ஆபத் தானது. எனவே, தமது கட்சி அதில் பங்கு கொள்ள விரும்புகிறது எனக் கூறியிருந்தது.

அரசியல் நிலைவரங்களை நோக்கும் போது - பொதுஜன ஐக்கிய முன்னணியும் ரோக்கியோ மாநாட்டில் பங்கு கொண்டிருக்கு மானால், சர்வதேச நிதியுதவிகளின் அங்கீகாரம் கூடியிருக்க வாய்ப்பிருக்கிறது. தற்சமயம் அதேகட்சி- ரோக்கியோ மாநாட்டில் கிடைத்த நிதியுதவிகள் கடன்களாகவே கிடைத்துள் ளன. இதன் முழுப்பாரமும் மக்கள்மீதே சுமத் தப்பட்டிருக்கின்றது, எனவே- நாங்கள் அதனை நிராகரிக்கின்றோம் எனக் கூறியுள் ளது. அரசியல் ஸ்திரமற்ற நிலையில் பொது ஜன ஐக்கிய முன்னணி இருப்பதை இந்த விடயம் சுட்டிக்காட்டுகின்றது.

இதற்கு ஒருபடி மேல் சென்றுள்ள சிஹல உறுமயக் கட்சி, தமிழீழ விடுதலைப் புலிக ளுக்குக் கிடைத்துள்ள கடன்களைத் திருப் பிச் செலுத்தும் பொறுப்பு, சிங்கள மக்களி டம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகக் கூறியுள்ளது.

எது எப்படியிருப்பினும், 'ரோக்கியோ' மாநாட்டில் கிடைத்த நிதியுதவிகளைப் பயன் படுத்தி, ஐக்கிய தேசியக் கட்சி நீண்ட ஸ்திர ஆட்சியை நடத்தமுடியாத நிலையே நிலவு கிறது. இனப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என முயற்சிக்கும் பிரதமர் ரணில், சர்வதே சத்தின் உதவியைப் பெற்றாலும், இந்தியா வின் முழுமையான ஆதரவு அவருக்கு இன்ன மும் கிடைக்கவில்லை.

இந்தியாவின் ஆதரவு ஏதோ ஒருவகை யில் ஜனாதிபதிக்குக் கிடைத்துள்ளது. ஆனால், அதனைக்கொண்டு - சமாதான முயற்சிகளையோ அல்லது இலங்கையின் ஆட்சியையோ உடனடியாக மாற்றும் எந்த வொரு செயற்பாட்டையும், ஜனாதிபதியால் மேற்கொள்ளமுடியவில்லை. இதற்கு, அவரது கட்சியின் அரசியல் பலமின்மை ஒரு கார ணமாகும்.

1994 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜனா திபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க, இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வைக் காணுவார் என்றே அனைவரும் எதிர்பார்த் தனர்.

ஆனால், சந்திரிகாவின் அரசியல் குறும் பார்வை, அவரை அடக்கி வைத்து விட்டது.

இந்தநிலையில், ஐக்கிய தேசியக் கட் சியின் ஆட்சி நீடித்துச் செல்லவேண்டுமா னால், தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக் கைகளை முழுமையாக நிறைவேற்ற வேண் டிய கட்டாயம் எழுந்திருக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகள், தற்சமயம் கோரிவரும், வடக்கு - கிழக்குக்கான பூரண அதிகாரம் கொண்ட இடைக்கால நிர்வாகசபையை வழங் கும்போதே, அவர்கள் மீண்டும் சமாதானப் பேச்சுக்களில் பங்குகொள்வர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களில் பங்குகொள்ளும்போதே, சர்வ தேச சமூகம் ரோக்கியோவில் இணங்கிக் கொண்ட நிதியுதவிகளை விடுவிக்கும். இந்த நிதியுதவிகள் விடுவிக்கப்பட்டால் மாத்திரமே, இலங்கையில் - பிரதமர் குறிப்பிடுவதைப் போல - வேலைவாய்ப்புக்கள் மற்றும் அபி விருத்தித் திட்டங்களை மேற்கொள்ளமுடியும்.

எனினும் - இதற்கெல்லாம் ஆரம்பப்படியாக அமைந்துள்ள, தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகசபைக் கோரிக்கையை, அரசாங்கம் எவ்வாறு நிறைவேற்றப்போகிறது என்பதிலேயே, ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஆட்சியின் ஸ்திரத்தன்மை புலப்படவிருக்கின்றது.

சர்வதேச அங்கீகாரத்தை வைத்துக் கொண்டு, தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகசபைக் கோரிக்கையை நிறைவேற்றும் பட்சத்தில் - ஜனாதிபதி அதற்கு எதிராக செயற்படுவாரோ? என்ற அச் சம் அரசாங்கத்தரப்பில் இருக்கிறது.

அதேநேரம் - ஜனாதிபதி சந்திரிகாவின் ஆசீர்வாதத்துடன் இடைக்கால நிர்வாகசபை ஒன்றை அமைக்கவேண்டுமானால், இந்தியா வுடன் உறவுகளைக் கொண்டுள்ள - முன் னர் இந்திய அனுசரணையுடன் அமைக்கப் பட்டு, வடக்கு - கிழக்கு மாகாணசபையில் பங்கேற்ற கட்சிகளை, இந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்களில் இணைத்துக் கொள்ள வேண்டியது அவசியமென வலி யுறுத்தப்படுவதாகத் தெரியவருகிறது.

ஆனால், இதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் எந்தளவிலான விட்டுக்கொடுப்பை மேற்கொள்வர் என்ற கேள்வியும் தொக்கி நிற்கிறது.


எனவே, சுழற்சிமுறைச் சிக்கல்நிலை ஒன்றே இன்றைய தென்னிலங்கை அரசியலில் காணப்படுகிறது. இதிலிருந்து, மீளவேண்டிய நிலை ஒன்றைப் பிரதம மந்திரி ரணில் விக்கிர மசிங்க எதிர்நோக்கியுள்ளார். ஆயினும், முன் னர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்த உடன்பாட்டைச் செய்துகொண்டதைப் போன்று, இடைக்கால நிர்வாகசபை விடயத் திலும் ரணில் விக்கிரமசிங்க நடந்து கொள் வாராயின், ஜனாதிபதி நிச்சயமாக ரணிலின் ஆட்சியைக் கலைத்து விடுவாரா என்பது நிச்சயமற்ற நிலையிலே இருக்கிறது.

ஏனெனில், சர்வதேச நாடுகளின் நிதியுத விகள் மூலம் இலங்கையில் அபிவிருத்தியை மேற்கொள்ளலாம் என்ற நிலைப்பாட்டை அர சாங்கம் இன்று தென்னிலங்கை மக்களுக்கு உணர்த்தியுள்ளது. இதனை, மையமாகக் கொண்டு பிரதமர், தமிழீழ விடுதலைப் புலி களின் இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை நிறைவேற்றுவார் என்று அரசியலில் ஒரு தரப்பு நம்பிக்கை கொண்டிருக்கிறது.

தற்சமயம், மக்கள் மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சியின் மீது ஏற்பட்டிருக்கும் - சற்று முன்னேற்றகரமான நம்பிக்கை, சர்வ தேச நாடுகளின் அழுத்தங்களுக்கு ஜனா திபதி இணங்கிச் செல்லவேண்டிய நிலைமை என்பனவற்றைக் கருத்திற்கொண்டு பார்த் தால் - தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக் கையை ரணில் விக்கிரமசிங்கவினால் நிறை வேற்ற முடியும் என்றே கருதப்படுகிறது.

இதற்கு அப்பால், அரசாங்கத்திடம் மாற் றுக்கொள்கை ஒன்றும் இருக்கிறது. அதாவது, நாடாளுமன்றில் பெரும்பான்மை அதிகாரம் இல்லாத நிலையில், ஆட்சியைத் தொடரு வதைக் காட்டினும் மீண்டும் ஒரு பொதுத் தேர்தலுக்குச் செல்வது உசிதமானது என, அரசாங்கத்தரப்பு எண்ணம் கொண்டிருக்கிறது.

இதற்கான பிரசாரத்திற்காக, ரோக்கியோ மாநாட்டின் உதவிகள் மற்றும் சர்வதேசத்தின் அங்கீகாரம் என்பவற்றை அது - பயன்படுத்த



ஜே.ஆர்.ஜெயவர்த்தன

விருக்கிறது.

இவ்வாறு, பொதுத்தேர்தல் ஒன்றுக்குச் செல்லலாம் என அரசாங்கம் எண்ணுகின்ற அதேநேரம் - தாமாகவே ஜனாதிபதியிடம் நடாளுமன்றத்தைக் கலைத்துக் கொள்வ தைக் காட்டினும், ஜனாதிபதியே நாடாளு மன்றத்தைக் கலைத்துவிட்டால், அது எதிர் பார்க்கப்படும் பொதுத்தேர்தலில் தமது கட் சிக்குக் கூடிய அனுதாபவாக்குகளைப் பெற் றுக்கொடுக்குமென, ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கை கொண்டிருக்கிறது.

அதேநேரம் - இதற்கான மாற்றுக்கருத் துக்களை ஜனாதிபதியின் பொதுஜன ஐக்கிய முன்னணி கொண்டிருக்கிறது. மக்கள் விடு தலை முன்னணியுடன் நடத்தப்பட்டுவரும் கூட்டிணைவுப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்படுவதாக பொதுஜன ஐக்கிய முன் னணி கூறுகின்றபோதும், இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இணக்கம் எதனையும் மக்கள் விடுதலை முன்னணியுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி ஏற்படுத்திக்கொள்ள வில்லை. எனினும், இடைக்கால நிர்வாகசபை என்ற விடயத்தில் இரண்டு கட்சிகளும் தளர்வுப் போக்கையே காட்டியுள்ளன. இதற்கு உதாரணமாக, மக்கள் விடுதலை முன்னணி யின் நடாளுமன்ற உறுப்பினர் விமல் ரட் நாயக்க, வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட வேண்டுமென வலி யுறுத்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆட்சித்தளம்பல், கொள்கைமாற்றம் என் பவற்றின் மத்தியில் கொழும்பு அரசியலில் கடந்தவாரம், நாடாளுமன்றம் மரண வீடாக் கப்பட்டமை முக்கிய நிகழ்வாக இருந்தது. இதனை நாடாளுமன்ற சிறப்புரிமை மீறலெனக் குற்றம் கூறுவதற்கு ஐக்கிய தேசியக் கட் சிக்கு அருகதையில்லையென்றே பொதுஜன ஐக்கிய முன்னணி கூறுகிறது.

அந்தக்கட்சி ஏற்கனவே நாடாளுமன்றத் தில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான ஜனாதிபதியின் நகல் திட்டத்தை எரியூட்டி யமையை, பொதுஜன ஐக்கிய முன்னணி நினைவுபடுத்தியுள்ளது.

இது இவ்வாறிருக்க, அரசாங்கத்திற்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களைக் கூறுவதற்கு ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் கோபி அனானைச் சந்திக்க, பொதுஜன ஐக்கிய முன்னணி தயாராகிவருகிறது. மறுபுறத்தில்- ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முரண்பாட்டை ஏற் படுத்தியுள்ளது. மேல்கொத்மலைத்திட்டம் ஆரம்பிக்கப்படாது என, பிரதமர் உறுதி வழங் கியுள்ள போதிலும், அதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டிருப்பதை ஆட்சே பித்து, காங்கிரஸ் இன்று நுவரெலியாவில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்துகிறது. அதற்கு மேலாக, அந்தக் கட்சி பொதுத்தேர்தல் பிர சார பணிகளையும் ஆரம்பித்துள்ளதும் குறிப் பிடத்தக்கது. ✷

# கிராம மக்கள் வாழ்க்கைத் தரம்; உயர்த்துவதற்குப் புதிய திட்டம்!

## நியாப் மூலம் நடைமுறைப்படுத்த முடிவு

(யாழ்ப்பாணம்)

கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அடிப்படை வசதிகளை முன்னேற்றவும்- 'ஜீவனோபாயம்' என்ற திட்டம் கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இது சம்பந்தமாக, நேற்றுமுன் தினம் யாழ்.செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற நியாப் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த, 20 மையக் கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. பொன்னாலை, இருபாலை தெற்கு, இடைக்குறிச்சி, கப்பூது, நவாலி தெற்கு, வல்லிபுரம், வேலணை தென்மேற்கு, காரைநகர், புளியங்கூடல், சரவணை கிழக்கு, உடுப்பிட்டி தெற்கு, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி, மத்தொனி, துன்னாலை தெற்கு, அத்தாய், துன்னாலை வடக்கு, புலோலி தெற்கு, குடத்தனை தென்மேற்கு ஆகிய கிராமங்களே தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும், நியாப் நடைமுறைப்படுத்திவரும் குளங்கள் புனரமைப்பு வேலைகள் ஜூலை மாதத்திற்குள்ளும், அணைக்கட்டுக் கட்டுமான வேலைகள் ஓகஸ்ட் மாதத்திற்குள்ளும் முடிக்கப்பட வேண்டும் என்றும், அரச அதிபர் உத்தரவிட்டார்.(அ)

## பத்திரிகையாளருக்கு விருதுகள்!

(வடமராட்சி)

யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் இரண்டு பத்திரிகையாளர்களுக்கு, விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தின் கலாசார கூட்டுறவுப் பெருமன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வில் - பத்திரிகையாளர் வே.தவச்செல்வத்திற்கு - துணிச்சலான பத்திரிகையாளர் விருதும், எம்.கே.ஜீவதாஸுற்கு - மூத்த பத்திரிகையாளர் விருதும் வழங்கப்படவுள்ளது.

விருது வழங்கிக் கௌரவிக்கும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி கலந்து கொள்ளவுள்ளார்.

## காணாமற்போனோர் விசாரணை அடுத்தமாதம் மீண்டும் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் காணாமற்போனோர் தொடர்பான, மனித உரிமை ஆணைக்குழுவின் அடுத்த கட்ட விசாரணைகள் மிகவிரைவில் நடைபெறவுள்ளன.

இவ்விசாரணைகள் அடுத்தமாதம்- 12, 13ஆம் திகதிகளில் யாழ். பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெறும்.

இவ்விசாரணைகளை நடத்துவதற்காக, கொழும்பிலிருந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் வருகைதரவுள்ளனர் என, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தேசிய ஒருங்கிணைப்பாளர் எம்.சி.எம்.இக்பால் தெரித்தார்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## உடுவில் கோட்ட ஆங்கில தினப்போட்டி

(உடுவில்)

உடுவில் கோட்டமட்ட ஆங்கில தினப் போட்டிகள், எதிர்வரும் 28 ஆம், 30 ஆம் திகதிகளிலும் அடுத்த மாதம் முதலாம் திகதியும், உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இப்போட்டிகளில் பங்குபற்றுவோரின் பெயர், விபரங்களை - நாளைக்குள் அனுப்பிவைக் கும்படி கோட்டக்கல்வி அதிகாரி செ.குபேரநாதன் கேட்டுள்ளார்.

(101)

## சாரணர் வேலை வாரம்

சாரணர் வேலை வாரத்தையொட்டி, வேலைவார அட்டைகள் அவ்வப் பகுதி மாவட்ட சாரணர் வேலைவார இணைப்பாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை ஆரம்பமான இந்த வேலைவாரம் - நாளை மறுநாள்வரை இடம்பெறுகிறது.

இதில் சேகரிக்கப்படும் 70 வீத நிதி - சாரணர்களுக்கும், 20 வீதம் தலைமைக் காரியாலயத்திற்கும், 10 வீதம் மாவட்ட ஆணையாளர் அலுவலகத்திற்கும் பகிர்ந்தளிக்கப்படும்.

## இலவச சித்த மருத்துவ முகாம்

(உடுவில்)

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலிகாமம் தெற்கு பிரதேச சபையினரால், இலவச சித்த மருத்துவ முகாம்- சுன்னாகம் பொது நூலகத்தில் செவ்வாய், புதன்கிழமைகளில் நடாத்தப்படவுள்ளது.

இம் மருத்துவ முகாமில்- சலரோக சிறுநீர் பரிசோதனை, இரத்த அழுத்தப்பரிசோதனை போன்றன நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (101)

## விவசாய உபகரணங்கள் வழங்கல்

(உடுவில்)

உலக உணவுத்திட்டத்தின் கீழ் - முன்னர் பசளைகள், விதைகள் பெற்றுக்கொண்ட சண்டிலிப்பாய், மாகியம்பிட்டி, மானிப்பாய் மேற்கு, நவாலி ஆகிய பிரதேச விவசாயிகளுக்கு - கத்தி, வாளி, மண்வெட்டி போன்ற விவசாய உபகரணங்கள், நாளை உடுவில் கமநல சேவை நிலையத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன. (101)

## கடந்த 10 வருடங்களில் 1,658 பேருக்கு செயற்கை அவயவங்கள் வெண்புறாவினால் பொருத்தப்பட்டன!

(ஆழியவளை)

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் - கடந்த பத்து ஆண்டுகளில், போரினால் பாதிப்புற்ற மக்களுக்கு பல்வேறுபட்ட புனர்வாழ்வு நடவடிக்கைகளைச் செய்துவந்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் இந்நிறுவனம்- செயற்கை உறுப்புக்களை வழங்குதல், கண்ணிவெடி விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொள்ளல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் தொழில்சார் பயிற்சிகளை வழங்குதல் ஆகிய பணிகளை சிறப்பாக ஆற்றிவருகின்றது.

இவ்வகையில், 1994 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டுவரையான 10 ஆண்டு காலப்பகுதியில், 1,658 பேருக்கு செயற்கைக் கால்கள் வழங்கப்பட்டுள்ளன. 95 பயனாளிகள்-முச்சக்கரவண்டிகளையும், 101 பயனாளிகள் - சக்கரநாற்காலிகளையும், 295 பயனாளிகள்- ஊன்றுகோல்களையும், 282 பயனாளிகள்- பாதணிகளையும், 11 பயனாளிகள்- கலிப்பர் உபகரணங்களையும் பெற்றுள்ளனர்.

இவற்றைத்தவிர, வறுமையில் வாழும் குடும்பங்களுக்கு புனர்வாழ்வு வசதிகளையும் வெண்புறா நிறுவனம் செய்து கொடுத்து வருகின்றது.

2002 - 2003 வைகாசி வரையான காலப்பகுதியில், கல்வி வசதியை ஏற்படுத்தும் வகையில், 3 ஆயிரம் ரூபா வீதம் 100 பேருக்கும், நன்னீர் மீன்பிடித் தொழில் செய்வதற்கு 6 ஆயிரம் ரூபா வீதம் 50 பேருக்கும், சிறுவியாபாரம் செய்வதற்கு 6 ஆயிரம் ரூபா வீதம் 25 பேருக்கும், சைக்கிள் திருத்தகம் அமைப்பதற்கு 6 ஆயிரம் ரூபா வீதமும் பண உதவிகள் செய்யப்பட்டன.

(122)

# அரும்புகள் சிறுவர் நிதியத்துக்கு உதவுவது அனைவரதும் கடமை

பண வசதியற்ற சிறுவர்களின் உயிர்காக்கும் முயற்சியாக, அவர்களின் மேலதிக சிகிச்சைக்கு உதவும் முகமாக, மருத்துவ மாணவர்களினால் 'அரும்புகள்' எனப்படும் நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்படவ்ள்ளது யாவரும் அறிந்ததே. யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள எமது தேசத்தின், ஏழைச் சிறார்களுக்கும் வளமான எதிர்காலம் ஒன்றைக் கிட்டச் செய்வது நமது அனைவரினதும் கடமையாகும்.

இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்டுச் சிறிது காலத்திலேயே- உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் புலம் பெயர்ந்தும் வாழும் எமது உடன் பிறவாச் சகோதரர்கள் பல பேர் எமது முயற்சியைப் பராட்டியதுடன் நிதியுதவி செய்யுவும் முன்வந்துள்ளனர்.

இந்நிதியத்துக்கு தத்தமது பங்களிப்பைச். செய்துகொண்டிருக்கும் தாராள மனது படைத்தோரின் பெயர் விபரங்கள் விரைவில் பத்திரிகை வாயிலாக வெளியிடப்படும்.

நிதியுதவி செய்ய விரும்புவோர் எம்முடன் தொலைபேசி - 021 - 2222134 அல்லது மின்னஞ்சல் - itsfmj @ sltnet. lk இல் தொடர்பு கொண்டால், நாம் உடனே தங்களை நன்றியுடன் தொடர்புகொள்வோம். நேரடியாகவும் இலங்கை வங்கி, மேற்தரக்கிளை, யாழ்ப்பாணம். கணக்கு இல. 5-21-2022431-4 இல் வைப்பிடலாம்.

இந்நிதியத்தின் வங்கிக்கணக்கு- மருத்துவ மாணவர் ஒன்றியத்தினால், குழந்தை வைத்திய நிபுணர் மற்றும் ஏனைய வைத்திய நிபுணரின் மேற்பார்வையின் கீழ் பேணப்படும். சிறுவர்களுக்கான நிதியுதவிகள் யாவும், அவர்களின் குடும்ப நிலைமை ஆராயப்பட்டே வழங்கப்படும்.

நாம் உழைக்கும் பணத்தில், அடுத்தவருக்கு உதவுவது நாம் செய்யும் தானதர்மமே என, பெரியோர்கள் கூறுவதுண்டு. எனவே, மருத்துவ மாணவர்கள் தமது அரு முயற்சி வெற்றியடைய- உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இருந்து பெருமனது படைத்தோரின் நிதியுதவிகளை எதிர்பார்க்கின்றார்கள்.

இவர்கள் யார்? இவர்கள் எமது குழந்தைகள். எமது சகோதரர்கள். எமது தேசத்தின் எதிர்காலச் சமுதாயம் இச்சிறுவர்களைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும். - **மருத்துவ மாணவர் மன்றம்**

# பாடசாலை மட்டத்தில் பொங்கு தமிழ் நிகழ்வு!

(உடுவில்)

பாடசாலை மட்ட 'பொங்கு தமிழ்' எழுச்சி விழா, நாளை தொடக்கம் 27 ஆம் திகதிவரை சகல பாடசாலைகளிலும் வெகுசிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்விக் கோட்டப் பணிப்பாளர், சேவைக்கால ஆலோசகர்கள், அதிபர்கள் அல்லது சிரேஷ்ட ஆசிரியர்கள் உட்பட 25 பேர் அடங்கிய குழுவினர், இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் சிறு சிறு குழுவாகப் பிரிந்து ஒவ்வொரு பாட சாலைகளுக்கும் சென்று மதிப்பீடு செய்வார்கள் என்று, 'பொங்கு தமிழ்' எழுச்சி விழாக்குழுவினர் அறிவித்துள்ளனர். (101)


# யாழ்.மாநகரசபைக்கு பாரஊர்தி மூலம் தார் ஏற்றித்தருவதற்கான கேள்வி அறிவித்தல் - 2003

மாநகர சபைக்குத் தேவையான தார் பரல்களை இலங்கைப் பெற்றோலியம் கூட்டுத்தாபனம் சப்புகஸ்கந்த கிளை கொழும்பில் இருந்து பாரஊர்தி மூலம் ஏற்றிவந்து யாழ்.மாநகர சபைக் களஞ்சியத்தில் ஒப்படைப்பதற்கான சேவையாளர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றோம். விண்ணப்பங்கள் யாவும் மாநகரசபை ஆணையாளருக்கு பதிவுத் தபால் மூலம் 17.07.2003 ஆம் திகதி அன்று நண்பகல் 12.00 க்கு முன் கிடைக்கக் கூடியதாக கூறுவிலைகளை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

| விபரம் | 1 தார் பரலுக்கு ஏற்றுக் கூலி |
|---|---|
| 1. 140 லீற்றர் கொண்ட தார் பரல் (1477) | ...................... |
| 2. 152 லீற்றர் கொண்ட தார் பரல் | ...................... |
| 3. 200 லீற்றர் கொண்ட தார் பரல் | ...................... |

*சேவையிலுள்ள*

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(சி.1098)

திகதி: 10.06.2003



# முதலாம் ஆண்டு திருமண வாழ்த்து



சிவபுண்ணியம் கண்ணன்

கண்ணன் உதயராணி

செல்வங்கள் பலபெற்று பல்லாண்டு வாழ்க!

வாழ்த்துபவர்கள்

**சிவபுண்ணியம் குடும்பத்தினர்**,
குமாட்டைய தோட்டம்,
நவிண்டில்.

(சி.1104)

**கணேஷ் குடும்பத்தினர்.**
றெட் குறொஸ் பாம் (Farm)
உடுப்பிட்டி வீதி,
தொண்டமனாறு.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அவுஸ்திரேலிய போர்க்கப்பலும் கொழும்பு துறைமுகம் வந்தது!

அவுஸ்ரேலிய கடற்படையின் 'எச்.எம்.ஏ.எஸ்.கனின்னா' என்ற யுத்தக் கப்பல், கொழும்புக்கு விஜயம் செய்துள்ளது.

கொழும்பு துறைமுகத்திற்கு வந்த இந்தக் கப்பலுக்கு - கடற்படை, மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளும், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் விஜயம்செய்து அதனைப் பார்வையிட்டனர்.

160 மீற்றர்கள் நீளமான இக்கப்பலில் - 350 அவுஸ்திரேலிய கடற்படையினர் பணியாற்றுகின்றனர். நேற்று, இக்கப்பல் கொழும்புத் துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச் செல்வதாக இருந்தது.

இதேவேளை - அமெரிக்காவின் ஏவுகணை நாசகாரியான 'ஒ கேன்' என்ற பாரிய கப்பலும், கொழும்பு துறைமுகத்தில் தரித்திருப்பது தெரிந்ததே.

# யாழ். சிறார் பராமரிப்பு நிலையங்களில் 50 இற்கும் மேல் பதிவுசெய்யப்படாதவை!

## போஷாக்கற்ற நிலையில் வாடுகின்றனர் சின்னஞ்சிறார்கள்

யாழ்.குடாநாட்டில், பல சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் பதிவுசெய்யப்படாத நிலையில் இயங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குடாநாட்டில், எழுபதிற்கும் மேற்பட்ட சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் இயங்குகின்றன.

இவற்றில் - பல சிறுவர் பராமரிப்பு நிலையங்களை - தனியார், மதஸ்தாபனங்கள் மற்றும் தொண்டர் நிறுவனங்களே நடத்திவருகின்றன.

இதில் - இதுவரை 25 சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டு, சட்டதிட்டங்களுக்கு அமைவாக நடாத்தப்படுகின்றன.

பல சிறுவர் பராமரிப்பு நிலையங்களிலுள்ள சிறுவர்களுக்குப் போதிய மருத்துவ சேவைகளோ அல்லது போஷாக்கு உணவுகளோ வழங்கப்படுவதில்லை. இதனால், அங்குள்ள சிறுவர்கள் பலர் நோய்வாய்ப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

பதிவு செய்யப்படாமல் இயங்கும் சிறுவர் இல்லங்களைப் பதிவுசெய்வதற்கு சமூகசேவைகள் திணைக்களம் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்றும் மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (லி)

# இலங்கையருக்கு தஞ்சம்தர மறுக்கும் பிரிட்டனின் முடிவுக்கு கடும் எதிர்ப்பு!

இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள், இனி பிரிட்டனில் தஞ்சம் கோரமுடியாது எனவும், இவை பாதுகாப்பான நாடுகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் - பிரிட்டிஷ் குடிவரவு அமைச்சர் ஹியூக்ஸ் அறிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் இந்த முடிவுக்கு - அங்குள்ள மனித உரிமைகள் அமைப்புக்களும், சிவில் உரிமை அமைப்புக்களும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில், அரசியல்சூழல் முழுமையாக மாறவில்லை. இந்நிலையில்- அவற்றைப் பாதுகாப்பான நாடுகள் என அறிவிக்கமுடியாது. இலங்கையில் அமைதி முயற்சி நிரந்தரமான கட்டத்திற்குச் செல்லவில்லை என இந்த அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

பிரிட்டனின் இந்த முடிவு குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள சர்வதேச மன்னிப்புச்சபையின் பேச்சாளர் ஒருவர் -

இலங்கையில் அமைதி முயற்சிகள் இன்னமும் சீரான பாதைக்கு வரவில்லை. இதனால், பிரிட்டன் தனது முடிவை தாமதிக்க வேண்டும்.

பங்களாதேஷிலும், கடந்த வருடம் பெருமளவு பொதுமக்கள் படையினரால் கொல்லப்பட்டனர். இந்த நிலையில், இந்த இரு நாடுகளையும் எவ்வாறு பாதுகாப்பான நாடுகளாக அறிவிக்க முடியும் எனக் கேள்வியெழுப்பியுள்ளார்.

பிரிட்டன் வெளியிட்டுள்ள வெள்ளைப்பட்டியலில் (White List) - இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளதால் - அங்கிருந்து வந்து பிரிட்டனில் தஞ்சம் கோரும் இலங்கையரின் விண்ணப்பங்கள் தீவிர கவனத்தில் எடுக்கப்படாது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - பிரிட்டனுக்குள் தஞ்சம்கோரி விண்ணப்பிப்போரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டால, அவர்கள் 24 மணித்தியாலத்துக்குள் திருப்பியனுப்பப்படுவர் எனவும் அமைச்சர் ஹியூக்ஸ் தெரிவித்தார்.

## லண்டன் சென்ற ரணில் பிளேயரை சந்திப்பார்

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு, பிரிட்டனுக்குச் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

மூன்று நாட்கள் அங்கு தங்கியிருக்கும் பிரதமர், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை சந்திப்பதற்குச் சந்தர்ப்பம் இல்லை என்று கூறப்படுகின்றது.

## சந்திரிகா - ரணில்...

இச்சந்திப்பின்போது, வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கான இடைக்கால நிர்வாகம் பற்றிய பல தகவல்களை பிரதம மந்திரி தெரிவித்தார் என்றும் - இடைக்கால நிர்வாகம் பற்றிய சகலவித ஏற்பாடுகளும் தற்போது பூர்த்தி செய்யப்படவில்லை என்றும், இவ்வேற்பாடுகள் முழுமையாகத் தயாரிக்கப்பட்டதும் - அது குறித்து விடுதலைப் புலிகளின் கருத்துக்களைப் பெறுவதற்காக அவர்களிடம் அனுப்பிவைக்கப்படும் என்றும் பிரதம மந்திரி ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

அதேவேளை, வடக்கு -கிழக்கில் அரசியல் நடவடிக்கையாளர்களின் கொலைகள் உட்பட பல விடயங்கள் ஆராயப்பட்டன என்றும்- ஆயுதங்களை ஒப்படைத்த அரசியல் தலைவர்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்குவது பற்றியும் ஆராயப்பட்டது என்றும், ஜனாதிபதி செயலகம் மேலும் அறிவித்துள்ளது. (200,01)

## விதார்...

விஜயம் செய்யவுள்ளது. இக்குழுவில் - விதார் ஹெல்கிஸனுடன் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஆகியோரும் அடங்குவர் என்றும் தெரிய வருகிறது.. (200)

## ரோக்கியோ...

மட்டுமே ரோக்கியோவில் கிடைத்த நிதியுதவியை சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள முடியுமென்றும் - இச்சந்திப்பில் ஜப்பானியத் தூதுவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அதேவேளை, மேலும் பல வெளிநாட்டு இராஜதந்திரிகள் - பிரதமரையும், ஜனாதிபதியையும் சந்தித்து இவ்விடயம் குறித்துக் கலந்துரையாடி வருகின்றனர். (200)

## இடைக்கால...

இந்த வரைபு தொடர்பான விடுதலைப் புலிகளின் கருத்து என்ன என்பதை அறிந்துகொள்வதற்காகவே, அரசின் மேற்படி விசேட தூதுக்குழு வன்னிக்குச் செல்லவுள்ளதாக - அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர் பேணாட் குணதிலக மேலும் தெரிவித்தார். (200)

# ஏகபிரதிநிதிகள் என்று கூற எனக்கு அதிகாரம் இல்லை!

## கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி

விடுதலைப் புலிகளுக்கு நான் மாறுபட்டவன் அல்ல, விடுதலைப் புலிகளுக்கு மாறாக நான் கதைப்பவனும் அல்ல. எனினும், விடுதலைப் புலிகள் தொடர்பாக சில நிலைப்பாட்டை எடுத்திருக்கிறேன். அதாவது, ஏகபிரதிநிதிகள் என்று சொல்லப்படுவது தொடர்பாக நான் எனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளேன்.

ஏகபிரதிநிதிகள் என்று சொல்லுகின்ற அதிகாரத்தை, எனக்கு மக்கள் தரவில்லை. எங்களுடைய கட்சியும் அப்படித் தீர்மானிக்கவில்லை.

ஏனென்றால், நாடாளுமன்றத்தில் வேறு கட்சிகளைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

- இவ்வாறு கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி பி.பி.ஸிக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில் -

பேச்சுவார்த்தை நடத்துவது என்றால், விடுதலைப் புலிகளுடன்தான் நடத்தவேண்டும் என்று அரசுக்கு அழுத்தம் கொடுத்தது உண்மை. தொடர்ந்தும் அழுத்தம் கொடுப்போம். அந்த நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இருக்காது. எமது கட்சி - தொடர்ந்து அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஒத்துழைப்பைக் கொடுக்கும். ஆனால், யாரும் எப்போதும் இப்படித்தான் செய்யவேண்டுமென்று எங்களைக் கேட்பது சரியல்ல என்றார்.

# வடமராட்சி துயிலுமில்லத்தில்....

நேற்றுமுன்தினம் காலை 9.45 மணியளவில் - வடமராட்சி மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர் துயிலுமில்லப் பொறுப்பாளரும், பொதுமக்களும் துப்புரவுப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது - ஆயுதம் தரித்த 8 இராணுவத்தினர் நான்கு பீல்ட் பைக்குகளில், அச்சுறுத்தும் வகையில் வாசலில் மிகவேகமாக வந்து நின்றனர்.

கைச்செய்கைகளால் அச்சுறுத்தி, அசிங்கமாகக் காறித்துப்பிவிட்டு வாகனங்களை இரைச்சலுடன் மீண்டும் கிளப்பியபோது, ஒரு சிப்பாயின் ஆயுதம் கீழேவிழ அதையும் எடுத்துக்கொண்டு, இரண்டுமுறை மாவீரர் துயிலுமில்லத்தை வெளிப்புறத்தால் சுற்றிவிட்டுச் சென்றனர்.

இவர்களது இத்தகைய செயற்பாடானது - பயமுறுத்தும் வகையிலும், அவமானப்படுத்துவதாகவும் இருந்தது.

கடந்த சில நாட்களாக இவ்வகையிலான - வேண்டுமென்றே செய்யப்படுகின்ற நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. தெருக்களிலும், சாலைகளிலும் அச்சுறுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் இவ்வகையான ரோந்துகள் - புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முரணாகவும், மீறும் வகையிலும் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பருத்தித்துறை துறைமுக....

நேற்றுக்காலை, பருத்தித்துறை இறங்குதுறையில் பொருட்கள் இறக்குவதற்காக - வழமைபோல் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் சென்றிருந்தனர்.

இறங்குதுறைக்கு செல்லும் முதலாம் குறுக்குத்தெரு வீதியிலுள்ள சோதனைச்சாவடியில், இவர்களது அடையாள அட்டையைப் படையினர் பார்வையிட்டனர். உடற்பரிசோதனைக்கும் தொழிலாளர்கள் உட்படுத்தப்பட்டனர். பின்னர், சோதனைச்சாவடிக்கு அருகிலிருந்த பற்றைக்குள் காலை 10.30 மணிவரை இருக்குமாறும், பின்னரே பொருட்கள் இறக்குவதற்காக இறங்குதுறைக்கு செல்ல அனுமதிக்கப்படும் என்றும் படையினர் தெரிவித்தனர்.

படையினரின் இந்த புதிய நடைமுறைக்கு எதிர்ப்புத்தெரிவித்து, தொழிலாளர்கள் சோனைச் சாவடியை விட்டு வெளியேறினர்.

கெடுபிடிகளின்றி, வழமைபோல் காலை ஆறு மணிக்கு தொழிலுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டால் மட்டுமே, தாம் பொருட்கள் இறக்கச் செல்ல முடியும் எனவும் - இல்லையெனில், தொடர்ந்தும் தாம் வேலை நிறுத்தத்தில் குதிப்போம் எனவும் ஊழியர்கள் தெரிவித்தனர்.

இதனால், நேற்று கொழும்பிலிருந்து சீனி ஏற்றிவந்த கப்பல் - இறங்குதுறையில் தரித்துநின்றுவிட்டு, பொருட்களை இறக்காமலேயே நண்பகலளவில் காங்கேசன் துறைக்குத் திரும்பிச் சென்றது. (09)

# தலைவரது ஒவ்வொரு முடிவும்...

அம்பாறை மாவட்ட மகளிர் சிறப்புத் தளபதி நிலாவினி, மட்டு-அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மட்டு-அம்பாறை மாவட்ட மகளிர் அரசியற் பொறுப்பாளர் பிரேமினி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டமானது, மட்டு-அம்பாறை மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பிரேமினி தலைமையில் மாலை 8.00 மணிக்கு ஆரம்பமானது. இதில் 300 இற்கும் மேற்பட்ட பெண்கள் சமூக மேம்பாட்டு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலானது - பெண்கள் சமூக மேம்பாட்டு அமைப்பின் தொடர்பினை வலுப்படுத்தவும், தற்போதைய அரசியல் நிலைப்பாட்டினைத் தெளிவுபடுத்தவும், சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடனும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் - கேணல் கருணா அம்மான் தொடர்ந்தும் உரைநிகழ்த்துகையில் -

யுத்தநிறுத்தம் ஏற்பட்டு 17 மாதங்களைத் தாண்டியுள்ள இந்த வேளையில், ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில், அண்மையில் இடம்பெற்ற உதவி வழங்கும் மாநாட்டில் நாம் கலந்துகொள்ளாமைக்கான காரணத்தினை நீங்கள் அறிவீர்கள். வடக்கு - கிழக்கிற்கு அதிகாரபூர்வமான இடைக்கால நிர்வாகமே தேவை. இதனையே எமது தத்துவாசிரியர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார். இதுவே எமது நிலைப்பாடாகும் என்றார்.




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.